# மூன்றுமாதம் கடுங்காவல் தண்டனை!

## நாரணமங்கலம் 144-வழக்கில் தீர்ப்பு

## இலட்சியப் போரில் ஏழு சிங்கங்கள்

## அடக்குமுறைக்கஞ்சா அருமை வீரர்கள்

### கொடுமை! கொடுமை! கொடுமை!!

### ஐயோ இதுதானா சுயராஜ்யம்?

திருச்சி மாவட்டம்—நாரணமங்கலம் கிராமத்தில் 27-11-50 அன்று ஆளவந்தாரின் அடக்குமுறையை எதிர்த்து பேச்சுரிமை காத்து கைது செய்யப்பட்ட நமதியக்க எழுச்சி பிம்பங்கள் எழுவரும் 7-12-50 அன்று மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டனர்.

**மூன்று மாதம்!**—நமது இளஞ்சீயங்களை, காங்கிரஸ் சர்க்கார் நமது மத்தியில் உலவாமற் செய்துவிட்டது. ஏழு இளம் காளைகளை அவர்கள் தாய்தந்தை, அன்பு மனைவி, ஆசை மக்களிடமிருந்து—மூன்று மாதங்களுக்கு—பிரித்துவிட்டது! கொடுமை! கொடுமை!! கொடுமை!!! இலட்சியத்துக்காகப் போராடும் வீரர்களை, இன்ப பூமியிலிருந்து பிரித்து, காராக்கிரகத்தில் தள்ளுகிறது காங்கிரஸ் சர்க்கார்!

அரியலூர் மாஜிஸ்டிரேட்டால் மேற்படி தண்டனை அறிவிக்கப்பட்டதும் நமது தோழர்கள், அகமகிழ்வுடன் அதை வரவேற்றனர்- சிறைச்சாலையை சிங்காரபுரியென யெண்ணி மகிழ்வுடன் தண்டனையை ஏற்றுக்கொண்ட அவர்கள் வீரங்கண்டு கூடியிருந்த மக்கள் பாராட்டினர்- அவர்கள் தியாகத்தை—எதிர்காலம் மறக்காது!

(6—12—50 அன்று நடைபெற்ற வழக்கு விசாரணை கீழேதரப்பட்டிருக்கிறது. அதற்கு முன் நடந்த விசாரணை இந்த இதழ் 3-ம் பக்கத்தில்)

திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் நாரணமங்கலம் 144 தடையுத்தரவு மீறிய 7 தோழர்கள் வழக்கு 6—12—50 காலை 11-45— மணிக்கு அரியலூர் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு நடவடிக்கைகளைக் கவனிக்க திருச்சியிலிருந்து தோழர்கள் எஸ். வி. லிங்கம், திராவிடப்பண்ணை டி. வி. முத்துகிருட்டிணன், டி.வி. அண்ணாமலை, என். சாம்பு, மத்திய செயற்குழு உறுப்பினர் அம்பில் தர்மலிங்கம், ஆகியவர்கள் வந்திருந்தனர் அரியலூர், மற்றும் சுற்றுவட்ட கிராமங்களிலிருந்தும்பெரும்பாலான தோழர்கள் வந்திருந்தார்கள். தோழர்கள் விஜயகோபாலபுரம் முத்துவேல், வி. ஏ. சிவன், கிருட்டிணசாமி, ஜெயங்கொண்டான் "பொய்யாமொழி" ஆசிரியர் பாஸ்கரன், அரியலூர் மாணிக்கம், நவநீதகிருட்டிணன், எம் மாரிமுத்து, ஆறுமுகம், கலியபெருமாள், இரத்தினம், கோபால், கரீம், அரங்கசாமி, சி. இளங்கோவன், அருணாசலம், மருதபிள்ளை, ஆர். ராமசாமி, மற்றும் பல கழக முக்கியஸ்தர்களும், கோர்ட்டுக்கு உள்ளும், வெளியும் நின்று நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு மிகவும் அமைதியாக இருந்தார்கள்.

கைது செய்யப்பட்ட ஏழு தோழர்களுக்கும் காலை 11 மணிக்கு பகல் உணவு அளிக்கப்பட்டது. பின் 11-45 மணிக்கு அனைவரும் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார்கள். கைதிகள் சரி பார்க்கப்பட்டு வரிசையாக கூண்டில் ஏற்றப்பட்டார்கள். முதலாவதாக பெரம்பலூர் சப்-மேஜிஸ்டிரேட் விசாரிக்கப்பட்டார். சப்-மேஜிஸ்டிரேட் 144 தடை விதிக்க நேர்ந்ததின் காரணத்தை விளக்கினார். தடையுத்தரவு கோர்ட்டில் காட்டப்பட்டது. பின் தடையுத்தரவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மீறப் போவதாக தோழர்கள் சொல்லுகிறார்கள் என்று பாடாலூர் சப்-இன்ஸ்பெக்டர் ரிப்போர்ட் அனுப்பியதன் பேரில் தானும் நாரணமங்கலம் கிராமத்துக்குச் சென்றதாகவும் அங்கு தோழர்கள் தடையை மீறுவதற்குத் தயாராக இருப்பதை அறிந்து அவர்கள் மேடைமீதுவந்து 1, 2 எதிரிகள் வார்த்தைகள் பேச முயன்றதும் அரஸ்ட் செய்யப்பட்டார்கள் என்றும் அதன்படி, 143, 188, பிரிவின்படி முன்பு குற்றப்பத்திரிகை அனுப்பப்பட்டது என்று சொன்னார்.

எதிரிகள் இரண்டு மூன்றுகேள்வி கேட்டு குறுக்கு விசாரணை செய்த பிறகு, இரண்டாவது சாட்சியாக பாடாலூர் போலீஸ் கான்ஸ்டேபிள் 904 பாலுசாமி விசாரிக்கப்பட்டார். அவர்தான் 144 'சர்வ்' செய்த விவரத்தை எடுத்துச் சொன்னார். அவரும் எதிரிகளால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அடுத்து நாரணமங்கலம் கிராம முன்சீப் சுப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

பப்ளிக் பிராசிக்யூடர்:— நீர் எந்த ஊர் முன்சீப்?

முன்சீப்:— நாரணமங்கலம்.

ப. பி:— உங்கள் ஊரில் என்ன தெரிய வந்தது?

(8-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

மலர் 9 | 10-12-50 | இதழ் 26

இலங்கை 15 சதம்] [விலை அணா 2

## சரண்டல் கூடாது, எந்த வடிவிலும்!

### நாட்டோர் தரும் நல்ல தீர்ப்பு

### பார்த்து தெளியட்டும், பாரான்வோர்!

சுரண்டல் கூடாது—எவரும், எவரையும் சுரண்டிப் பிழைத்தல் கூடாது என்ற உணர்ச்சி பெருகிவிட்டது. இந்த உள்ளத் துடிப்பை, எத்தனையோ கள்ளத்தனங்களால் மறைக்க முனைந்தும் முடியவில்லை.

திராவிட நாட்டிலே, வடநாட்டார் சுரண்டுகிறார்கள்—இது பிரத்தியட்ச உண்மை — கண்கூடான காட்சி! இதனை மறைக்க முடியவில்லை. ஆகவே, ஒரு மறைவுப் படுதா கண்டுபிடித்தார்கள், தேசிய சிங்கங்கள்—ஒரே இந்தியா, இதில் வடக்கும், தெற்கும் ஏதேது என்று பேசினர். அந்த மாய்மாலப் பேச்சுகளில் மக்கள் மயங்கியதாகத் தெரியவில்லை.

பஞ்சாபியா, அவனுக்கு பாக்கு கூறிடும் பழக்கம் ஏன் நமக்கு—குஜராத்தியா, அவனைக் கும்பிட்டு வாழும் கோணல் புத்தி கூடாது, மூல்தானியா, அவனுக்கு அடி பணியும் குணம் ஏன், சேட்டுகளுக்கு இங்கு ஏன் சுகவாழ்வு என்று மக்களின் குரலில் ஆத்திரம் கலந்தது.

அதே நேரத்தில், தாயகத்தைச் சேர்ந்தவர்கள், பர்மாவிலே, இலங்கையிலே, வேறு பல நாடுகளிலே கூலிகளாக, நாயினும் இழிந்த அடிமைகளாக வாழ்வதைப் பார்க்கும் பொழுது ஏன் ஆத்திரம் பிறக்காது?

வருகின்ற வடநாட்டான், இங்கு வந்ததும் சௌகார்ஜி, ஆனால், வாழ்ந்த திராவிடத்தின் பிரஜை, வெளி நாடுகளிலே கூலி! ஒப்பிட்டுப் பார்த்தனர், தென்னாட்டுப் பெருங்குடிகள். 'சுரண்டாதே, சூது மதி கொண்ட வடநாட்டு பனியாவே, சுருட்டிக் கோள், உனது சுரண்டல் கொள்கையை' என்று கூவிடும் நிலை பிறந்துவிட்டது.

இதனை சென்னை ஆட்சியாளர் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். வீம்புக்கு வார்த்தைகளை வீசுவது விவேகிகள் செயலல்ல — இன்று வேண்டிய போக்கும் இதுவல்ல! அத்துடன், தென்னாட்டாரின் இந்த ஏகோபித்த எண்ணத்தை, வளர்ந்து வரும் மனக்கொதிப்பை உணர வேண்டும், டெல்லி மதிய ஆட்சியினர். உணரவும் இடம் தராத, உலர்ந்த இதயத்தவராக அவர்கள் உலவினால், பிறகு விபரீதம் விளையாகத் தூவப்பட்டுவிடும். அபாயம் தான் அறுவடையாக இருக்கும்.

இது சாதாரண, சராசரி அறிவு படைத்தோருக்கும் புரியும் உண்மை. ஆளும் பொறுப்பிலே அமர்ந்திருப்போருக்கு நிச்சயமாகப் புரியும்— ஆனாலும் அலட்சியப்படுத்தப் பார்க்கிறார்கள். அபாயத்தை அணைத்துக் கொள்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

திருச்சியில் டிசம்பர் 2-ம் நாள் நடந்த வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மாநாடு இந்த உண்மையைத்தான், நாட்டோருக்கும், ஆண்டிடுவோருக்கும் எடுத்துக் காட்டுகிறது.

சுரண்டல், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு உருவில் இருக்கத்தான் செய்தது! அங்கங்கே அதற்கேற்ற வகையில் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் நடந்திருக்கின்றன. இரத்தக் கறை படிந்த ஏடுகள் பல, இன்னமும் இம்மாதிரியான விடுதலைப் போர்க்கதைகளைச் சொல்லிக்கொண்டுள்ளன, உலக வரலாற்றிலே!

திராவிடத்திலே, வடக்கத்தியார், வாணிபத்தின் பெயரால் சுரண்டிக் கொழுக்கிறார்கள். இங்கோ, சோற்றுக்கின்றி, துணிக்கின்றி, இருக்க இடத்திற்கின்றி ஏங்கிச் சாகிறார்கள், சொந்த நாட்டில்! அந்நிய நாட்டிற்கு ஓடியாவது அரைவயிற்றுக் கஞ்சிக்குப் பாடுபடுவோம் என்று கடல் கடந்து செல்கிறார்கள். அதனை எதிர்த்து ஒழித்துவிட வேண்டும் என்ற உணர்ச்சி அரும்பிவிட்டது. அந்த அரும்பு நிலை வளரத்தான் போகிறது — ஆகவே நிலைமையை உணர்த்துவிக்க இதைவிட பொன்னான சந்தர்ப்பம் வேறில்லை. திருச்சியில் நடந்த வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மாநாடு, இதனை எடுத்துக் காட்டுகிறது!

வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மாநாட்டில் தோழியர் இந்திராணி பாலசுப்பிரமணியம் கொடியேற்றி வைத்தார். தோழர் ஏ. பி. சனார்த்தனம் திறப்புரை நிகழ்த்தினார். பெரியார் ஈ. வே. ரா. தலைமை தாங்கினார்.

ஆட்சியாளர், தங்கள் அறிவுக் கண்களை திறந்து, கலந்துகொண்டவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதை மட்டும் மனதிலிருத்தாமல், பிரச்சினை எவ்வளவு முக்கியமானது என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

—

### மந்திரிமார்கள்!

"ஆடம்பரமான கார்களில் மந்திரிகள் பவனி வருகிறார்கள்! கொழுத்த சம்பளமும் அலவன்சும் கொட்டிக் கொள்ளுகிறார்கள்! கள்ளமார்க்கெட்காரர்களுடன் குலாவிக் கிடக்கிறார்கள்! மக்கள் இதயத்தை மகிழ்விக்கும் சிறு செயலைக்கூட செய்யவில்லை. தங்களைத் தவிர, பிறர் வாழ்க்கையில் புன்சிரிப்பு உதயமாகும் வகையில் உருப்படியாக எதையும் செய்யவில்லை!"

— கேரள காங்கிரஸ், கே. கேளப்பன்.

### அண்ணாதுரை

| | |
|---|---|
| 16—12—50 | குறிஞ்சிப்பாடி |
| 17—12—50 | திருச்செங்கோடு |
| 18—12—50 | பவானி |

# தூத்துக்குடி "சவுக்கடி" வழக்கு விபரம்

## சர்க்கார் கட்சி விசாரணை

### 19–12–50க்கு ஒத்திவைப்பு

தூத்துக்குடி: முன்பு தெரிவித்தபடி தோழர்கள் சிவசாமி, தங்கப்பழம் ஆகியோர்மீது "சவுக்கடி" என்ற நூலைத் தீட்டி வெளியிட்டமைக்காக தொடரப்பட்டுள்ள வழக்கு 1—12—50 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய வழக்கு விசாரணையின்போது சர்க்கார் தரப்பில் போலீஸ் டிப்டிசூபரின்டெண்ட் சாட்சியமளித்தார். நமது தோழர்கள் சார்பில் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில், அவர் அளித்த பதில்கள், கூடியிருந்தோரிடையே நகைச்சுவையையுண்டாக்கின

வழக்கறிஞர் கேட்ட கேள்விகளுக்கு மக்கள் சிரிக்கும்வகையில் முரண்பாடான பதில்களைத் தந்தார்.

மீண்டும் வழக்கு 19-12-50க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## குருட்டு நம்பிக்கை கொள்ளாதீர்!

—*—

"கல்வியறிவையும் அனுபவத்தையும் பரந்துகிடக்கும் மனித சமுதாயத்துக்குப் பயன்படுத்த வேண்டும். புராணங்களில் குருட்டு நம்பிக்கை வைக்கக் கூடாது. பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து அதனால் நன்மை உண்டு என்று கண்ட பின்னரே எதையும் ஏற்கவேண்டும். கண்மூடித்தனமாக எதையும் பின்பற்றக்கூடாது. அறிவைக் கொண்டே எதையும் அளந்து பார்க்கவேண்டும்."

—பேசியது, நாமல்ல, நமது கழகத்தவருமல்ல!

—இந்து மதத்தில் அபார பற்றுள்ளவராகக் கருதப்படுபவர், பெரிய சனாதனி என்று கூறப்படுபவர், இந்திய காங்கிரசின் தலைவரான தாண்டன்.

—அலாகாபாத் அகர்வான் வித்யாலய கல்லூரி மாணவர் சங்கத்தில் கடந்த மாதம் பேசுகை இப்படி வெளியிட்டார்!

"ஏதேச்சாதிகார ஆட்சியை நிலை நிறுத்தும் நோக்கத்துடன் கர்னாடக காலத்தில் சுயநலமிகள் சிருஷ்டித்ததே ஜாதி முறையாகும்."

நாபா. கிருஷ்ண சவுத்ரி,
ஒரிசா முதலமைச்சர்.
நவ. 14

### வேண்டுகோள்

"சவுக்கடி" வழக்கு சம்பந்தமாக "தார்மீக ஹிந்து" என்னும் பத்திரிகையின் 7—11—48, 28—11—48, 5—12—48 தேதிய இதழ்கள் உடனடியாகத் தேவைப்படுகிறது. ஆகவே, இந்த இதழ்கள் 18-12-50 க்குள் எங்களுக்குச் சேரும்படி, தோழர்கள் யாரிடமாவது இருந்தால். அனுப்பியுதவ வேண்டுகிறோம் அனுப்பவேண்டிய முகவரி:-

"கிளர்ச்சி" அலுவலகம்,
தூத்துக்குடி

7-ம் பக்கத் தொடர்ச்சி

**நவ—9.**

கம்பத்தில் (மதுரை மாவட்டம்) தோழர் சிக்கையன் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எம் எஸ். இராமசாமி, விருதை என். இராமசாமி, சமயநகர் கலையழகன் பேசினர்.

அழகாபுரியில் தோழர் சின்னகணபதி தலைமையில் நடந்த தி-மு-க- செயற்குழு கூட்டத்தில் தோழர் ஏ. எஸ். பி. முத்து பேசினார். இவ்வாண்டுக்குரிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:-ஏ. எஸ். மாரிமுத்து, துணைச் செயலாளர்:- வீ. கே. வீரநாதன், பொருள் உறுப்பினர்:- சி. அ. க. சின்னகணபதி, விளம்பர உறுப்பினர்:- எஸ். தனிக்கோடி, ஏனைய உறுப்பினர்கள்- கன்னியப்பன், பெரியபுலியன், எஸ். அய்யாவு, வெள்ளைச்சாமி; முத்துச்சாமி, பெரியகருப்பன், பாண்டியன், சாலைமுத்து, கருப்பன், பெருமாள்.

மேலசின்னணம்பட்டியில் தி. மு. க. புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- ரொ. அழகர்சாமி துணைச் செயலாளர்:- வி. எஸ். மணியன், பொருள் உறுப்பினர்:- ப. பழனிச்சாமி, விளம்பர உறுப்பினர்.- ப. சுப்பிரமணியன், ஏனையசெயற்குழுவினர்:- தங்கையா வி. பி. சாமி, கா. ந. ராசன், ந. கந்தசாமி, கிருட்டிணன், வேலூர் கருத்தோவியம், இளஞ்செழியன், பாண்டியன் மற்றும் பலர் பேசினர்.

சுப்பிரமணியபுரத்தில் தோழர் பெரியநாயகம் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பால்ராஜ், எம். அய்யாச்சாமி, காஞ்சி. கல்யாணசுந்தரம் பேசினர்.

வடசேன்னையில் தோழர் முனுசாமி தலைமையில் தி. மு. க: செயற்குழு கூட்டம் நடந்தது. இந்த ஆண்டுக்குரிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்கள்:— பி. வி. முத்துச்சாமி, எஸ். பி. டி. திராவிடமணி, பொருள் உறுப்பினர்:- எம். சுப்பிரமணியம், காப்பாளர்:- பி. இராமசாமி, விளம்பர உறுப்பினர்:— என். கிருஷ்ணன் மற்றைய செயற்குழுவினர்:- தில்லை பக்தவத்சலம், விருதை வில்லவன், கே. வி. கே. சாமி, என். கிட்டு, எஸ். எஸ். மணி, நீலமேகம், எம். முத்தையா, பி. ராஜா, கந்தசாமி. மாவட்ட உறுப்பினர்கள்:- பி. வி. பொ. நல்லையா, நல்லுசாமி. தோழர்கள் வி. பி. சாமி, கா. ந. ராசன் பேசினர்.

திருச்சுழியில் தி. மு. க. துவக்க விழா தோழர் சிவ. சண்முகசுந்தரன் தலைமையில் நடந்தது. தோழர்கள் விருதை ந. இராமசாமி, எம் எஸ். இராமசாமி பேசினர்.

**நவ. 12**

மூஞ்சூர் பட்டு கிராமத்தில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் மணி எழிலன், முத்துசாமி, எஸ். பி. டி. திராவிடமணி, பேசினர்.

**நவ. 14**

ஆனைமலை தி. மு. க. செயற்குழு கூடி கீழ்க்கண்டவர்களை தெரிந்தெடுத்தது. பொதுச்செயலாளர்:- வெங்கடகிருஷ்ணன். செயலாளர்:- ஏ. எஸ். வெங்கடாசலம், துணைச் செயலாளர்:- ஆ. வே. சாமி, விளம்பர உறுப்பினர்:- ஏ. எஸ். நாராயணன், நிதி உறுப்பினர்:- சுப. நாராயணன்.

—X—

### கோவை மாவட்ட சுற்றுப் பயணம்

கோவை மாவட்டத்தில் கழக சம்பந்தமான சுற்றுப் பயணம் ஒன்று நடத்த ஏற்பாடாகியிருக்கிறது — தோழர்கள் ஈ. வே. கி. சம்பத், எஸ். ஆர். சந்தானம், கோபி. ஜி. என். ராஜு ஆகியவர்கள் கலந்து சொற்பொழிவாற்றுவார்கள். 20-12-50 முதல் ஆரம்பமாகும்.

என். ஈ, பாலகுரு,
கோவை மாவட்ட அமைப்பாளர்,
தி. மு. கழகம் ஈரோடு.

### நீத்தார் கடன்

தாரமங்கலம், நவம்பர் 21.

நேற்று மாலை 4 மணிக்கு இவ்வூர் திராவிட இயக்கப் பிரமுகர்கள் தோழர் கே. எ. அங்கப்பனார், எ. மாரிமுத்து ஆகியோரின் தாயார் காளியம்மாள் அவர்களின் நீத்தார் கடன் சீர்திருத்த முறையில் நடைபெற்றது.

தோழர் ப. கண்ணன் தலைமை தாங்கி புரோகிதக் கொடுமை, சடங்குகளைப் பற்றிப் பேசினார். தோழர் அ. ஆண்டியப்பனின் பெண் குழந்தைக்கு "அறிவுக் கண்" என்று தோழர் கண்ணன் பெயர் சூட்டினார்.

இந்த நிகழ்ச்சிகளின் நினைவாக "திராவிட நாடு" வாரத் தாளுக்கு ரூ 5 நன்கொடையளிக்கப்பட்டது.

அண்ணாவின் கலர் படத்துடனும் திராவிட முன்னேற்ற கழக கொடியுடனும் கூடிய 1951-ம் ஆண்டு காலண்டர் மிகவும் அழகிய முறையில் 18/11 அளவில் வெள்ளை ஆர்ட் பேப்பரில் தயாராகிறது. எங்கும் விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.

100 காலண்டர் விலை ரூ. 20%
250 காலண்டருக்கு மேல் ஆர்டர் கொடுக்கும் ஏஜண்டுகளுக்கு அவர்களுடைய பெயர், விலாசம், விளம்பரம், இனமாக அச்சடித்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:—

**சௌத் இந்தியா ஸ்டோர்**

படம், கண்ணாடி, சட்டம்,
வியாபாரம்.

116–B. இராசவீதி,
A. பெரியகாஞ்சிபுரம்.

## எல்லை காந்தி

*

"எல்லை காந்தி" என்று அன்போடு அழைக்கப்படும் கான் அப்துல் கபார் கான், சுதந்திரம் மலர்ந்த நாள் முதல் சிறையிலே பூட்டப்பட்டுக் கிடக்கிறார்.

இந்திய விடுதலைப் போரில் முக்கிய அங்கம் வகித்த மாவீரர், அவர். அவரை, மூன்று ஆண்டுகளாக பாகிஸ்தான் சர்க்கார் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலுள்ள சிறைச்சாலையொன்றில் வைத்திருக்கிறது.

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தைச் சேர்ந்தவர் அவர். பாகிஸ்தானின் பிரஜை. அவரை, பாகிஸ்தான் அரசாங்கம், சிறைக்குள்ளே போட்டிருக்கிறது.

அண்மையில், அவரது உடல் நிலை அபாயகரமான நிலைமையிலிருப்பதாக இந்தியப் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. பலர், அவர் விடுதலை செய்யப் படலாம் என்றும் கருதினர்.

ஆனால், பாகிஸ்தான் சர்க்கார் அவரது விடுதலை குறித்து எதுவும் குறிப்பிடாமல், 'சிறைக்குள்ளே அவர் சுகமாக இருப்பதாக' ஒரு செய்தியை வெளியிட்டது.

சுதந்திரப் போரில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைக்கு ஆளாகி, தன் வாழ்க்கையில் பல ஆண்டுகளை காராக்கிரகத்திலேயே கழித்த அச் செயல் வீரரின் வாழ்வு, இன்னும் 'விடுதலை' பெறவில்லையென்றால், அது ஜனநாயக நேர்மையுள்ளோரால் சகிக்கமுடியாத காட்சியேயாகும்.

நாட்டுப்பிரிவினை யேற்படும்வரை' அதை எதிர்த்த முக்கிய காங்கிரஸ் தலைவர்களில் அவரும் ஒருவர்தான். ஆயினும், பிரிவினை யேற்பட்டபிறகு, அவர் தனது பழைய கொள்கையை வலியுறுத்தாமல் பாகிஸ்தானத்திலேயே வாழ முடிவு செய்தார்.

எனினும், அவரை, இன்னும் ஏதோகாரணங்கள் காட்டி சிறையிலே வைத்திருப்பது அழகல்ல, நீதியல்ல. மூன்று ஆண்டுகள்!— இம்முதியவரின் வாழ்வு, சிறையில், சிதைவதென்பது எவரையும் கலங்கவே செய்யும்.

அதிலும், தன்னோடு விடுதலைப் போரில் ஈடுபட்ட தலைவர்களெல்லாம் "விருது", பெற்று மந்திரிகளாகவும், ஆட்சி அதிகாரிகளாகவும், சுக வாழ்வை அனுபவிக்கும் நேரத்தில், தான் மட்டும் காராக்கிரகவாசத்தில் கிடக்கிறோமே-என்ற சிந்தனை, அச் செயல்வீரரைச் சித்திரவதைக்கு ஆட்படுத்தவே செய்யும்.

அவர் — நாட்டு வாழ்வுக்காகத் தனது ஆயுளை தத்தம் செய்தவர். அவருடைய கொள்கைகள் எத்தகையதாயினும், பொதுத் தொண்டுக்காகத் தன்னைத் தத்தம் செய்த பெரியார்- அவரை, விடுதலை பெற்ற பாகிஸ்தான், கௌரவத்தோடு நடத்துவதையே, நல்லோர் விரும்புவர்— எல்லோரும் எதிர்பார்ப்பர்.

ஆகவே, அவர் விடுதலை செய்யப்பட்டு சுதந்திர பாகிஸ்தானில் சுதந்திரமாக உலவும் நாளை எதிர்பார்க்கிறோம்.

———

**ஒரு புதுமை!**

திராவிட இயக்க வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகள், தலைவர்கள் —அறிஞர்களின் பிறந்த நாட்கள் அரசாங்க விடுமுறை நாட்கள், மற்றும் உலக வரலாற்று நிகழ்ச்சிகளை உங்களுக்கு நினைவூட்டும் பணி செய்ய,

**1951**

**தினசரி காலண்டர்**

முகப்பில், தி. மு. கழகக் கொடி தென்றலில் அசைந்தாடும் அழகுக் காட்சியுடன் தயாராகிறது.

**விலை அணா பத்து**

அணா 14-க்கு தபால் பில்லை அனுபபி ரிஜிஸ்டர் தபாலில் பெறலாம்.

விற்பனையாளர்க்கு கழிவு உண்டு.

**காலண்டர் சப்ளாயிங் கம்பெனி**
**திருமங்கலம்**
(Ad) (மதுரை ஜில்லா)

# பேச்சுரிமைப் போர்வீரர்கள்மீது வழக்கு

## "பஸ் போக்குவரத்தை" தேசியமயமாக்குக!

### கட்டுப்பாடு ரத்தாவது நல்லதல்ல

### திருப்பத்தூர் விவசாய சங்க முடிவு

வாணியம்பாடி (வ. ஆ) நவ–30 திருப்பத்தூர் தாலுகா விவசாயிகள் சங்க நிர்வாகக்குழு கூட்டம் தோழர் வி. என். தத்தப்பன் தலைமையில்கூடி கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. சென்னை மாநிலத்தில் உணவுப் பொருள் கட்டுப்பாட்டை எக்காரணங்கொண்டும் தளர்த்தவோ நீக்கவோ கூடாது என்று அரசியலாரை வேண்டப்படுகிறது.

2. அண்மையில் வெல்லக்கட்டுப்பாடு அமுலானது ஆனந்தமே. ஆனால், அரசியலார் உடன் வெல்லக் கொள்முதல் செய்து உணவுப் பொருள் கடையில் வினியோகம் செய்தால், வெல்ல வேதனை தீரும்.

3. நமது மாநிலத்தில் சில மாவட்டத்தில் ஓடும் பஸ்களை இவ்வாண்டில் அரசியலாரே ஏற்று நடத்துவதாகத் திட்டம். திடீரென அதனைக் கைவிடப்பட்டது கண்டு வருந்துவதுடன், மீண்டும் நமது நாட்டின் நகராண்மைக் கழகங்களையும் மாவட்ட சபைகளையும் பஸ்சர்வீசை நடத்த உத்தரவுப் பிறப்பிக்க சர்க்காரை வேண்டப்படுகிறது.

4. எங்கள் தாலுக்காவில் மருத்துவ வசதி கிடைக்கும் 'வான்' ஒன்று ஏற்பாடுசெய்து கிராமங்கள்தோறும் வைத்திய வசதி செய்யவேண்டப் படுகிறது.

### வருந்துகிறோம்

நமது நண்பர் நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களுடைய அருமைச் சகோதரியார் திருமதி மீனாட்சி அம்மையார் கடந்த 7—11—50 அன்று, குடந்தைக் கருகிலுள்ள அம்மாசமுத்திரத்தில் காலமானார் என்ற செய்தியறிந்து மிக மிக வருந்துகிறோம். தனது அன்புச் சகோதரியின் பிரிவால் ஆழ்ந்த துயருக்கு ஆளான நண்பர் ராமசாமிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

## இந்திய எதேச்சாதிகாரம்!

### இலண்டனில் எதிரொலி!

"தங்களது தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் சுயநிர்ணய உரிமை கிடைக்குமென்று, மகிழ்வுடன் எதிர்பார்த்த தென்னாட்டாரின் ஆசை மோசமான முறையில் நிராகரிக்கப்பட்டு விட்டது. யூனியன் சர்க்கார் புதுப் புதுச் சட்டங்கள் மூலம் தனக்குள்ள அதிகாரத்தை அதிகப்படுத்திக் கொண்டு, மாகாண சர்க்கார்களின் நடவடிக்கைகளில் தலையிடுமளவுக்குச் சென்றுவிட்டது. சுதந்திரத்துடன் வாழலாமென்று எதிர்பார்த்த தென்னாட்டார் ஆசை சூறையாடப்பட்டு விட்டது. டெல்லி இன்னும் சென்னையிலிருந்து மிக மிக வெகு தூரத்தில் தான் இருக்கிறது!" என்று டிச. 1ந் தேதி இலண்டன் கிழக்கு இந்திய சங்கத்தில் பேசிய சென்னை "மெயில்" பத்திரிகை ஆசிரியர் ஏ. ஏ. ஹெயில்ஸ் வெளியிட்டார்.

ஈரோட்டில்

### பொதுச்செயலாளர் அண்ணாதுரை

12—11—50ம் ஞாயிறு மாலை 6 மணிக்கு ஈரோடு காரைவாய்க்கால் மைதானத்தில் தி. மு. க பொதுக் கூட்டம் தோழர் எஸ். ஆர். சந்தானம் தலைமையில் நடந்தது. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர். முதலில் பல சங்கங்களின் சார்பாகவும், தனிப்பட்டவர்கள் சார்பாகவும், வாழ்த்து மடல்களும் மலர்மாலைகளும் அணிவிக்கப் பட்டன.

தோழர் ஈ. வே. கி. சம்பத் பேசிய பிறகு, தோழர் அண்ணாதுரை திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தைத் துவக்கிவைத்து, நீண்டநேரம், திராவிட மாணவ எழுச்சியின் வளர்ச்சி, அந்த அணிவகுப்பு ஆற்றிய தொண்டு, இனி அதற்குரிய கடமை, திராவிடம் பிரிய வேண்டிய அவசியம் ஆகியவை பற்றி மிக விளக்கமாகப் பேசினார். தோழர் ஆர். பெருமாள் நன்றி கூறினார்.

## ஒரு சேதி!

"ஒரு சேதி அண்ணா"

"என்ன தம்பி!"

"இந்திய அரசியலமைப்பில் 19வது ஷரத்தைத் திருத்தப் போகிறார்களாமே?"

"ஆமாம், தம்பி!"

"புது அரசியலமைப்பில் அதற்குள் திருத்தம் ஏன், அண்ணா?"

"அது சரியாக இல்லையாம் தம்பி!"

"அப்படி, அந்த ஷரத்து என்ன அண்ணா?"

"மக்களுடைய அடிப்படை உரிமைகள் பற்றியது தம்பி!"

"ஐயோ! அடிப்படை உரிமையில் கை வைக்கிறார்களா?"

"ஆமாம், தம்பி!'

"என்ன காரணமாம் அண்ணா?"

"சுதந்திரம் அதிகமாகயிருப்பதால் மக்களை கட்டுப்படுத்த முடியவில்லையாம்"

"சுதந்திரம் எங்கே அண்ணா? மக்களில் எத்தனைபேர் சிறையில்! எவ்வளவு பேர் மீது அடக்கு முறை! எத்தனையோ பேர் துப்பாக்கிக்குப் பலி! இதுதான் தினசரி நடக்கிறதே. இருந்தும்......"

"அது போதாதாம். இன்னும் அதிகமான நடவடிக்கைகள் எடுக்கணுமாம். அதற்காக......"

"என்னண்ணா வேடிக்கை! சுயராஜ்யம்என்று சொல்லிக்கொண்டு மக்கள் ஜீவாதார உரிமையிலே கை வைப்பதா?"

"இது காங்கிரஸ் ராஜ்யம் தம்பி!'

"சே! அக்கிரம ராஜ்யம்னு சொல்லுங்க அண்ணா. எந்த நாட்டிலும் இல்லாத அதிசய ராஜ்யம்னு சொல்லுங்க..."

## சர்க்காரின் குற்றப்பத்திரிகை

### குற்றச்சாட்டை மறுத்தனர்

### வழக்கு ஒத்திவைப்பு

திருச்சி மாவட்டம் நாரண மங்கலத்தில் 27—11—50 அன்று பேச்சுரிமைப் போரிலீடுபட்டு கைது செய்யப்பட்ட தோழர்கள் எழுபேரும் 1–12—50 அன்று பொம்பலூரில் இருந்து அரியலூருக்கு கொண்டுவரப்பட்டார்கள். டிபுடி கலெக்டர் முன் நமது அறப்போர் வீரர்கள் எழுவரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

தோழர்கள் மீது 143, 188 ஆகிய செக்ஷன்களின் கீழ் சர்க்கார் தரப்பில், நமது தோழர்கள் மீது, குற்றப் பத்திரிகை படிக்கப்பட்டது.

தாங்கள் குற்றவாளிகளல்ல. என்று நமது தோழர்கள் மேற்படி குற்றச்சாட்டை மறுத்தனர்.

அதன் பேரில் வழக்கு 6-12-50ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

நமது தோழர்கள் எழுவரும் அரியலூர் சப்ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறனர்.

பேச்சுரிமை காக்க, அடக்குமுறையை மீறிச் சென்று சிறையில் கிடக்கும் நமது சிங்கங்கள்:—

| | |
|---|---|
| திருச்சி மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் | நு. வான மாமலை |
| நாரணமங்கலம் கழக செயலாளர் | சேண்பகராசன் |
| " " பொருளாளர் | வி. எம். விஜயகோபால் |
| " " விளம்பர உறுப்பினர் | ஆர். ஆதிமூலம் |
| மூங்கில்பட்டி கழகத் தோழர் | எம். வடிவேலு |
| சென்பகாரசபுரம் | மருதமுத்து |
| லெப்பைக்குடிக்காடு | அமராவதி |

## செல்லாது!

அகாலித்தலைவர், மாஸ்டர் தாராசிங் சென்ற திங்கள் சிறையிலடைக்கப்பட்டார்- அவர் சிறையிலே தள்ளப்பட்டதற்குக் காரணம், அவர்மேடையிலேறிப்பேசியதுதான்!

தாராசிங் பேசினார் — சிறையில் தள்ளப்பட்டார்! சட்டம் அவரைக் கொட்டிற்று அவர் பேச்சிலே 'குற்றம்' கண்டு பிடித்து விட்டது.

கிழ்பஞ்சாபிலுள்ள ஷஹாபாத், லூடியானா என்ற இடங்களிலேஅவர் பேசிய பேச்சு சட்ட விரோதமெனத்தீர்மானித்தனர்-

அவர் பேச்சினால் புரட்சி வருமாம்! புயல் வீசுமாம், எரிமலை வெடிக்குமாம், கடல் குமுறுமாம், கொந்தளிக்குமாம்—சட்ட விரோதமான பேச்சாம்! சொல்லிவிட்டனர்!

சீக்கியத் தலைவர் தாராசிங்—விடுதலை வீரர். சீக்கிஸ்தானம் பெற்று, காங்கிரஸ் எதேச்சாதிகாரத்திலிருந்து தனது மக்கள் விடுதலை பெற்று வாழவேண்டும் என்ற திடமான நம்பிக்கையோடு போராடி வருபவர். எனவேதான், இந்தச் சர்க்கார் அவரைத் தங்களது "விரோதி" யெனக் கருதி, அடக்குமுறை அம்புகளை அவர்மீது வீசுகின்றனர். நம்மை நோக்கி வீசும் 'வகுப்புத் துவேஷி' என்ற பழிச்சொல்லை வீசி அவரைப் படாதபாடு படுத்துகின்றனர். அதன் ஒரு பகுதிதான், அவர் ராஜத்துவேஷம் ஏற்படும் வகையில் பேசியதாகக் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடர்ந்தனர்.

153 A! நமக்குப் பழக்கமான சட்டப்பிரிவு—நமது சர்க்காருக்கு, நம்மைத் தாக்க 'வழக்கமாக' கிடைக்கும் ஆயுதம் — இதனைத் தான் தாராசிங் மீதும் வீசினர்-

ஆனாலும், 'அப்பீலில்' இது செல்லாது, இனி இது நீதிக்குமுன் எதிர்த்து நில்லாது என்று சொல்லி விட்டனர் கிழ்பஞ்சாப் உயர்நீதி மன்ற நீதிபதிகள். அதுவும், சட்ட புத்தக எடுகளைப் புரட்டி, பக்கம், வரி, எழுத்து என்று அழுத்தத் திருத்தமான ஆதாரத்தோடு. இன்றைய புதிய இந்திய அரசியல் சட்டம் 19வது ஷரத்தின் மூலம் தரப்படும் பேச்சு சுதந்திரத்தைப் பறிப்பதாகும் மேற்படி நடவடிக்கை என்று 'பட்டவர்த்தனமாகத்' தீர்ப்பளித்து விட்டனர்-

ஆனால் நம்மாகாணத்திலேஇதனை ஏதோ பெரிய 'பிரம்மாஸ்திரம்' என்று நினைத்துக்கொண்டு 'குரங்காட்டம்' ஆடுகிறார்கள்—ஆடி ஓயட்டும்!

ஒரே இந்தியா—ஒரேவகை சட்டதிட்டம்—ஒரு மாகாணத்தில் அது செல்லாது என்று கூறிவிட்டனர். இங்கு மட்டும் எத்தனைநாள் செல்லுமென்று நீதி நிமிர்ந்து கேட்கிறது- நேர்மை அதட்டிக் கேட்கிறது- அடக்குமுறை தன்தலையை தாழ்த்திக்கொள்கிறது.

தாராசிங்கை உடனே விடுதலை செய்யவேண்டும் என்று தீர்ப்பளித்துவிட்டனர். அவர் வெளியில் வந்துவிட்டார்- நேற்று பேசியதை நாளை பேசப்போகிறார்-

நம் மாகாணத்திலே நடக்கிற 'அடக்கு முறை' 'நாடகத்தையும்' இதனையும் ஒப்பிட்டுப்பாருங்கள்-

## இலக்கிய நோக்கம்பற்றி நெடுஞ்செழியன்

### வாணியம்பாடி கல்லூரியில் தெளிவுரை

"இலக்கியம் ஒரு காலக் கண்ணாடி. ஒரு நாட்டு மக்களின் பண்பை, அறிவை, அன்பை உலகுக்கு அது எடுத்துக் காட்டுகிறது. நாட்டை உருவாக்க இலக்கியம் பயன்பட்டது போல வேறு எதுவும் பயன்பட்டதில்லை. வேறு எக்கலையும் எழுப்பாத—எழுப்ப முடியாத — இன்ப வுணர்வலைகளை இலக்கியம் எழுப்புகிறது" என்று 19-11-50 வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரி தமிழ் மன்றத்தில் தமிழ்ப் பேராசிரியர் கா. அப்துல்கபூர் M. A. தலைமையில் சொற்பொழிவாற்றிய தோழர் இரா. நெடுஞ்செழியன் M. A. "இலக்கிய நோக்கம்" என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார். கல்லூரி மாணவர்கள் யாவரும் கூடியிருந்தனர். மன்றச் செயலாளர் தோழர் மா. குஞ்சிதபாதம் கடைசியில் நன்றி கூறினார்.

திராவிட நாடு

ஞாயிறு] 10—12—50 [காஞ்சி

# 'டெல்லி' குட்டுகிறது! 'சென்னை' குனிகிறது!

—:×:—

பசி, பசி என்று கூவுகிறார்கள்—அவர்கள் பிச்சைக்காரர்களல்ல. புசிக்க ஒரு கவளம் சோறு கொடுக்க வேண்டும் என்று வாதாடுகின்றனர், சத்திரத்து வீணர்களல்ல அவர்கள்!

'பசி, பட்டினி என்ற குரல், தினம் கேட்கிறது! வீடுதோறும், வீதி தோறும், விதவிதமான குரலிலே எழுப்பப்படும் பிச்சைப் பாட்டின் முன்னடியல்ல—கையேந்தி நின்றிடுவோரின் வழக்கமான சொற்களுமல்ல! கேட்பவர்கள், சட்டசபை உறுப்பினர்கள் யாரைப் பார்த்து? இந்த நாட்டு மந்திரிமார்களைப் பார்த்து!

சட்டசபைகள், பண்டாரங்கள் கூடிப்பாடிடும் சாவடிபோலாகிவிட்டது!

பிச்சையெடுத்திடும் நிலையையே ஒழித்திட வேண்டும் என்று வாதாடலோம் பார்த்திருக்கும் நம் கண்களிலே இன்று இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்கின்றன, நாள் தோறும் ஏற்படும் கோரக் காட்சிகள், கொடூரச் சித்திரங்கள்! 'செல்விருந்தோம்பி, வருவிருந்தின் வரவினை' எதிர்நோக்கிடும் பரம்பரையினர் நாம். 'பகடு நடந்த கூழ்பல்லாரோடு பாத்துண்' என்று பதிகம் பாடிய வம்சத்திலே வந்தவர்கள் நாம். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்ற உண்மையிலே புணர்ந்து வாழ்ந்தோர் நாம். நமக்கு இன்று உணவில்லை. அதுமட்டுமா? பிச்சையிட்டுண்ணென்று பேசி வாழ்ந்த பெருங்குணம் படைத்தோரின் சந்ததியினர் இன்று பிச்சைக்காரர்களாகும் நிலையிலே இருக்கிறார்கள். இந்த வெட்கங்கெட்ட நிலையை நாம் மறக்கமுடியாது!

சோறுடைய நாடு என்று பேர் பெற்ற நாட்டிலே, நெற்களஞ்சியம் என்று புகழ்ந்துரைத்த நாட்டிலே, வாட்டத்தைப் போக்கிட வயல்களும், வரப்புகளும், அதன் அருகே மீசையை முறுக்கி மேலே ஏற்றி, சுடர் முகந்தூக்கி, கலப்பையே செங்கோலாக்கி, களிப்புக் கொப்பளிக்கும் சிரிப்பை வீசி நிற்கும் உழவ மன்னர்கள் உலவும் நாட்டிலே பட்டினி கிடக்கிறோம்—பசியால துடிக்கிறோம்—பஞ்சத்தால் வாடுகிறோம்!

'கைதூக்கவே' கற்றிருந்த நம் சட்டசபை உறுப்பினர்கள், வாய் திறந்துவிடவேண்டிய அளவு உணவுப் பஞ்சம், திராவிடத்தில் வளர்ந்துவிட்டது! அவர்களே கேட்டார்கள், பசியால் வாடுகிறார்கள் மக்கள், அவர்களின் பசிப்பிணியறுக்க ஒரு மார்க்கம் தேவையென்று கேட்டார்கள்.

கேட்டார்கள்—ஆம், வார்த்தையிலே ஒரு திருத்தம் தேவை—ஓலமிட்டார்கள், 'ஒப்பாரி'வைத்தார்கள் என்று கூடச் சொல்லலாம். ஆனால் அவர்கள், ஏதோ மக்களின் தேவையை தாமே உணர்ந்து பேசிவிட்டார்கள் என்று தவறுதலாகக் கருதவேண்டாம். அத்தகைய சூழ்நிலையை நாட்டு மக்களின் குமுறும் வயிறு, கொந்தளிக்கும் மனம் ஏற்படுத்திவிட்டன! ஆகவேதான், 'பேசாமடந்தையரும்' பேசினர்!

நாட்டிலே உணவுப் பஞ்சம் சொல்லும் எல்லையைக் கடந்து விட்டது—சட்டசபையிலே ஓலம், அதனால் சர்க்காருக்கும் கிலியேற்பட்டது!

ஊமைகள் பேசினர் — செவிடர்கள் கேட்டனர்! பேசாத எம். எல். ஏ-க்கள் பேசினர் மக்களை மதியாத காங்கிரஸ் சர்க்காரும், கவனத்தைத் திருப்பிற்று!

சென்னை மந்திரிசபையிலே ஏற்பட்ட கொந்தளிப்பால், 'டெல்லி' ஏதாவது அசைந்ததா என்றால் 'ஏதுமில்லை, எம்பிரானே' என்று தான் விடை சொல்ல வேண்டும்.

அரிசிப் பஞ்சம் தலைவிரித்தாடத் தொடங்கியபொழுதே, இங்கிருந்த வியாபாரிகள், பர்மா அரிசியைக் கொணர தங்களுக்கு அனுமதி வேண்டினர் மறுக்கப்பட்டது. மக்களை மட்டும் பட்டினியால் கொன்று குவிக்க மறக்கவில்லை, இந்த 'மக்கள் சர்க்கார்'!

இங்கே கத்தாழையைத் தின்றார்கள்—புளியங்கொட்டையைப் புசித்தார்கள்—மனிதன், மிருகமானான்! மிருகங்கள் உலகிலேகூட உணவுப் பஞ்சம் வருமளவிற்கு கண்டகண்ட கிழங்குகளை, கீரைகளைத் தின்கிறான்! இன்னும் தின்னவேண்டிய நிலையைத் தான் இந்த ஆளவந்தார் நீடிக்கச் செய்துள்ளனர்!

'மண்ணைத்தான், கல்லைத்தான், புல்லைத்தான் புசிக்கத்தான் கற்பித்தானா, இல்லை, அரிசியைத்தான், நெல்லைத்தான் கொடுத்துத்தான், காத்துத்தான் இரட்சித்தானா—பண்டாரப் பாடலைத் திருத்திப் பாடுகிற அளவிலேதான் நிலைமை இருக்கிறது. இதனை நாம் உணர்கிறோம். நம்மை ஆளுவோரும் உணர்கிறார்கள். ஆகவேதான் அவர்களும் ஏதேதோ திட்டம் தீட்ட முனைகிறார்கள். ஆனால், நம்மை ஆளும் சென்னை ஆளவந்தாரை, ஆட்டு விக்கும் மூலமூர்த்திகளின் இருப்பிடமாம், 'டெல்லி' உணரவில்லை—உணர முடியாது! அதனைத்தான் நாம் எடுத்துச் சொல்கிறோம்

முன்னர், தனிப்பட்ட வியாபாரிகள், பர்மாவிலிருந்து அரிசிகொண்டு வருகிறோம் என்று கேட்டபொழுதும், 'டெல்லி' மறுத்துவிட்டது—திட்டவட்டமாக தடுத்துவிட்டது!

இப்பொழுதும், அதே மாதிரி தன் அதிகாரக்குரலை உயர்த்தி, ஆதிக்க கரத்தை நீட்டி ஆணையிட்டு விட்டது.

தென்னாட்டு வணிகர்கள், இப்பொழுது பர்மாவில் நொய்யரிசி ஏராளம் கிடைக்கிறது. அதுவும் பர்மிய அரசியல் தடையேதுமின்றி எளிதாக அனுப்பும் வசதியுமிருக்கிறது. எங்களுக்கு இறக்குமதி அனுமதியிருந்தால், நொய்யரிசிகொண்டு வந்தாவது, நொந்த உள்ளத்தோடு உலவும், இந்நாட்டவரின் பசியைப் போக்கலாம் என்று கேட்டனர். சென்னை ஆட்சியாளர், இதற்கு இணங்கி, மத்திய சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொண்டனர். ஆனால், 'டெல்லி' ஒரு 'குட்டு' குட்டியே சொல்லிவிட்டது. ஏற்கனவே, இம்மாதிரி கேட்டதை மறுத்துள்ளோம் மேலும் அதுபற்றிக் கேட்டதே பெருந்தவறு. இப்படி தனிப்பட்ட வியாபாரிகள், இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கமுடியாது என்று இரக்கந்துளியுமின்றி கூறிவிட்டது!

தனிப்பட்ட வியாபாரிகளுக்கு மட்டுந்தான் உரிமை மறுத்தார்கள் என்றல்ல, இந்நாட்டு சர்க்காருக்கும் அந்த அதிகாரம்கிடையாது- இன்று சென்னை ஆட்சியே, நேரடியாக, நொய்யரிசியை வரவழைக்க வேண்டுமானாலும் முடியாது—அந்த உரிமை மத்திய சர்க்காருக்குத்தான்- தனிப்பட்ட வியாபாரிகளுக்கு அவர்கள், உரிமை தர மறுத்தார்கள்- ஏற்றுக் கொள்ளலாம்- ஆனாலும் ஒரு நாட்டின் ஆட்சிக்கே அந்த உரிமை கிடையாது- தென்னாடு, வடநாட்டின் வாயசைவின்றி, கைசாடையின்றி எதுவும் செய்யமுடியாது!

நாம் கேட்டது நொய்யரிசி — முழு அரிசிகூட அல்ல! அதனையும் மறுத்துவிட்டார்கள். ஆனால், அவர்களாவது நமக்கு, வரவழைத்து தருகிறார்களா அதுவுமில்லை. ஆனாலும் மறுக்கிறார்கள். நம் ஆளவந்தார்களோ மண்டியிடுகிறார்கள். மதியிருண்ட போக்கிலே, மக்களின் மனக்கொதிப்பை உணராது வடக்கு திசை நோக்கி வணங்கி நிற்கிறார்கள்! கைகூப்பிய வண்ணம் காட்சியளிக்கின்றனர்.

சுயாட்சி பெற்றோம், இனி சுபீட்சம்! சுயராஜ்யம் வந்தது, இனி சுகராஜ்யம்! அடிமை போயிற்று, இனி அடிமை அகன்றுவிடும்! அந்நியர் அகன்றனர், இனி ஆனந்தம்தான்! இப்படியெல்லாம் மக்கள் கனவு கண்டனர். கனவு நினைவாகவில்லை. நம் எண்ணம் வீணாயிற்று.

எதிர்பார்த்தது எதுவும் நடக்கவில்லை — ஏமாற்றம் தான் பரிசாக கிடைத்தது!

உண்ணவும் உணவில்லையென்று கூறிடும் நிலைதான் இன்றும் நம்மைப் பிடித்தாட்டுகிறது.

சென்னையோ, டெல்லியைக் காட்டுகிறது! டெல்லியோ, அதட்டுகிறது, மிரட்டுகிறது, கண்களை உருட்டுகிறது! ஆனாலும் பசியை விரட்டவில்லை. பட்டினியை துரத்தவில்லை. பஞ்சத்தை நீக்கவில்லை.

நாம், 'டெல்லி' தொடர்புகூடாது என்று கூறிடுவதின் உட்பொருள் பலருக்குப் புரிவதில்லை—சிலருக்குப் புரிந்தும், புரியாததுபோல் பாவனை செய்கிறார்கள். அதனால் இலாபம் இருப்பதாகக் கருதுகிறார்கள். எனினும் தென்னாடு, தனித்தியங்கினால் தான் சுகம் பிறக்கும், சோகம் பறந்திடும், என்பதனை இப்பொழுதாவது புரிந்துகொள்வார்களா, நம் தேசிய திலகங்கள்!

திராவிடநாடு பிரிந்தால், அதன் எதிர்காலம் ஒளியுள்ளதாக 'இருக்கும். இல்லாவிட்டால், நொய்யரிசிக்கும், கையேந்தி நிற்கும் நிலைதான் இருக்கும். அதற்கும்,மறுப்புகிடைக்கும். சொந்தநாட்டு மக்கள் சோறுக்கின்றித் தவித்திடும்பொழுது, கிடைக்கும் நொய்யையும் வாங்கித் தரக்'கையாலாகாத' சர்க்கார் என்று பிறநாடுகள் கையாண்டி செய்யும்—அப்பொழுது நம்'கனம்கள்' தலையை தாழ்த்தி, முகத்தைமூடிக்கொண்டு, தங்களையே மறைத்துக்கொள்ள 'புதர்' தேடவேண்டிவரும்.

பசி—இது, மனித அடக்குமுறைகளுக்கும் அடங்காத இயற்கை வேகம்! இதைத்தணிக்கக்கூடஉரிமை இல்லை, சென்னை சர்க்காருக்கு! கேவலம், நொய்யரிசி, உடைபட்ட அரிசி அதனைக்கொண்டு வருவது நல்லது, இங்கே அந்த அரிசி வருமானால், இருக்கும் உணவுக் குறைபாட்டை தீர்க்கலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இருந்தும் முடியவில்லை. ஏனெனில் மத்திய சர்க்கார் தடுக்கிறது என்றால, அந்த 'மத்திய' பிடி ஏன் நமக்கு என்று மக்கள் கேட்க மாட்டார்களா? அந்தநாள் விரைவில் வந்துகொண்டிருக்கிறது.

பசி இங்கு, புசிக்க உணவு பக்கத்தில், எடுத்து வரப்போகிறான் ஒருவன்—அவனைத்தடுத்து நிறுத்துகிறவன் யாரானாலும் கோபந்தானே வரும். மத்திய ஆட்சி இந்தமனித சுபாவத்தைக்கூட அறியாமல் பிடிவாதப்பாதையிலே போகிறது, போகட்டும்! முடிவு, விரைவில் தெரிந்துவிடும்.

திராவிடம் பிரியவேண்டும் என்று நாம் கூறிவருகிறோம்—பலகாரணங்களை எடுத்தோதுகிறோம். இதோ, 'நொய்யரிசிக்கும் கையைப்பிடித்து நிறுத்துகிறது, 'டெல்லி'—என்ன செய்வது? அதன் பிடியிலேதான் திராவிடம் இன்னமும் இருக்கவேண்டுமா? சிந்தனையுள்ளோர், தெளிவான முடிவு தரட்டும்.

×

# காஞ்சி ★ மாநாடு ★

—×—

டிச: 23, 24, தேதிகளில் ,காஞ்சியில் நடைபெறவிருக்கும் செங்கற்பட்டு மாவட்ட தி-மு-க- முதல் மாநாட்டின் பந்தல் வேலைகள் துவக்கப்பட்டுவிட்டன- பெருமிதமான அளவில், அலங்காரமான பந்தல்! மாநாட்டில் நமதுகழகச்சொற்பொழிவாளர்கள் தனித்தனி தலைப்பில் — ஒவ்வொரு பிரச்னை குறித்தும்பேசுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்!

கைத்தறிக் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கீழ்க்கண்ட விதமாக மாநாட்டுக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன-

| | |
|---|---|
| வரவேற்பாளர் | 5—0—0 |
| பிரதிநிதி | 2—0—0 |
| பார்வையாளர் | 1—0—0 |
| பெண்கள் | 0—8—0 |

கட்டணம் இருநாட்களுக்கும் நாடகத்துக்குக் கட்டணம் கிடையாது-

காஞ்சி மாநாடு—கருத்து விளக்க மாநாடு! நமது கழக வளர்ச்சியின் வெற்றிக்காட்சி! அடக்குமுறைச் சர்க்காருக்கு எச்சரிக்கை விடுக்கும் மாநாடு! நமது இதயகீதம் — முழங்கப்போகும் மாநாடு!

R- K- மூர்த்தி,
E· எதிராசு,
விளம்பர உறுப்பினர்கள்.

✻

## தோழர் இரா· நெடுஞ்செழியன்

கீழ்க்கண்ட ஊர்களில் நடக்கும் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்வார்.

| | |
|---|---|
| 11—12—50 | மேல்பட்டம்பாக்கம் பண்ருட்டி |
| 12—12—50 | உளுந்தூர்பேட்டை |
| 14—12—50 | காமயகவுண்டன் பட்டி |
| 15—12—50 | கண்டவராயன்பட்டி தேவகோட்டை |
| 16—12—50 | சொக்கநாதபுரம் மானாமதுரை |
| 17—12—50 | விருதுநகர் |
| 18—12—50 | குத்தாலம் தென்காசி |

## திருவாரூரில் 10—12—50-ல் தி.மு.க. ஆண்டு விழா

தோழர்கள்
சி. பி. சிற்றரசு
என். எஸ். இளங்கோ
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
கவிஞர் கண்ணதாசன்
கே. ஆர். செல்லமுத்து.
மு. கருணாநிதி
இராம. அரங்கண்ணல்
கலந்துகொள்வர்.

# வகுப்புவாரிமுறை நம் உரிமை சாசனம்

## நாடே கேட்கிறது, நாம் மட்டுமல்ல

### ஆளவந்தார் அறியட்டும்

வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை ஒழித்துக்கட்ட, ஏற்ற சந்தர்ப்பம் எதிர்பார்த்தார்கள் — சமயம் கிடைத்தது. சட்டத்தின் துணையை நாடினர். கூண்டேறினர், கூவினர், சமூகநீதியைக், கடைசியில் சாய்ந்துவிட்டனர்! அதனால் நாட்டின் பெரும்பான்மை மக்களின் வாழ்வை நாசமாக்கிவிட்டனர். ஆனால், அந்த நிலையை, திராவிட மக்கள் சகித்துக்கொண்டிருக்க மனம் ஒப்பவில்லை. தங்கள் இனம் உயர ஏற்ற வழியாக இருந்த சமூக நீதியை நிலைநாட்ட எத்தகைய போராட்டங்களிலும் ஈடுபட தயாராக உள்ளனர்.

சென்னை சர்க்கார், சமூக நீதியைக் காப்பாற்றத் தயங்காது என்று கூறினர். நாம் பூரித்தோம். அது மட்டுமல்ல, 'மக்களின் பட்டாளம் உங்கள் பக்கத்திலே நிற்கிறது— அவர்களை நடத்திச் செல்ல நாங்களிருக்கிறோம் அச்சம் விடுங்கள், ஆக வேண்டியவைகளை, ... யமின்றிச் செய்யுங்கள்' என்றோம். உள்ளத்திலே உலுக்கிக் கொண்டிருந்த அச்சத்தை விட்டாலும், வெளிக்கு நம் மீது சீறினர்.

அவர்கள் வகுப்புத் துவேஷிகள், வகுப்புவாதத்தை வளர்ப்பவர்கள்- அவர்கள் இந்த சந்தர்ப்பத்தை, தங்கள் கட்சி வளர்ச்சிக்காக ஒரு தருணமென எண்ணிக்கொண்டு, திராவிட இயக்கத்தவர், மக்களைக் கிளப்பிவிடுகின்றனர் என்றனர், 'கனம்கள்', மற்றும் அவர்தம் கட்சியைச் சேர்ந்தோர். நாம், சிரித்தோம். நாம் வளர மார்க்கமில்லாமல், சந்தர்ப்பங்களுக்காகக் காத்துக் கிடக்கிறவர்கள் என்று எண்ணுபவர்கள் ஏமாளிகள். ஏனெனில், நாம் சமூக நீதியை நிலைநாட்டிய கட்சியின் சந்ததியினர். அதுபற்றி அவர்கள் பேசுகிறபொழுது நம்மைப்பற்றிப் பேசுகிறார்கள் என்றுதான் அர்த்தம்! ஆகவே, சமூக நீதியைக் கொண்டு, நாம் ஏதோ புதிய ஆதரவைத் திரட்ட புறப்பட்டோம் என்று பேசுவதாலோ, ஏதோ 'சிலரை' திருப்திபடுத்த முடியும் என்று அவர்கள் கருதுவார்களானால், அதற்கும் நாங்கள் பலியாகிறோம் — திட்டுங்கள்— தீவிரமாகத் தாக்குங்கள்—பலமாகக் கண்டியுங்கள். அதனையும் தாங்கிக் கொள்ள நாங்கள் தயார் என்று கூறிவிட்டு, நம் இலட்சியப்பாதையில் நடந்துகொண்டே இருக்கிறோம். ஆனால், ஆளவந்தாரே, நீங்கள் மட்டும், வறிதிருந்து, இந்நாட்டோரின் வாழ்வை பாலைவனமாக்கி விடாதீர்கள்—சமூக நீதியிருப்பதால் தான் திராவிட இனத்திலே அறிவுக்கண் ஒளிவிடுகிறது—கல்வி விளக்கு மிகப் பிரகாசமாக எரிய வசதி கிடைத்தது. ஆனால் அவர்கள் அதனை அவித்து இருட்டைப் பெருக்கிடத் தவியாய் தவித்தனர். அதனால் தங்கள் சுருட்டும் கொள்கைக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தனர்- ஆகவே, ஆளவந்தாரே நல்லது செய்ய, தயங்காதீர்' என்று கூறினோம்.

திருச்சியில் டிசம்பர் 3ல் நடந்த வகுப்புவாரி உரிமை மாநாடு இதனை மேலும் வற்புறுத்துகிறது. அது கூட அல்ல, மேலும் ஒரு பலமும் சேர்கிறது, சர்க்கார் பக்கம்!

சமூக நீதியின் சார்பிலே நிற்பவர்கள் எல்லாம், வகுப்புவாதிகள், வகுப்புத் துவேஷிகள் என்றெல்லாம், தூற்றினார்கள் 'அவர்கள்'— இப்பொழுது அதற்கும் வழியில்லாது செய்துவிட்டது திருச்சி மாநாடு.

தலைமை வகித்தவர், அவர்கள் கூறுகிற மாதிரி, வகுப்புவாதி என்று அவர்களாலேயே தூற்றப்படாதவர்- அவர்களாலே போற்றப்பட்டவர்— பெரியமேதை - அரசியல் அறிஞர், அனுபவக்களஞ்சியம், தோழர் இரத்தினசாமி அவர்கள்! கல்வித்துறையின் கடைசி எல்லைக்கோட்டையும் கடந்து சென்றனர்- ஒரு பெரிய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்து பணியாற்றி, கல்வித்துறையின் நுண்ணறிவுகொண்டபெரியார் மாணவர் உலகை நன்குகப்புரிந்து கொண்டவர்- அவர்களின்நிலைமட்டுமல்ல, அவர்கள் மனவளம், அதற்கு எத்தகைய எருவிட வேண்டும், நீர் விடவேண்டும் என்பதுமட்டுமல்ல, இந்நாட்டு கல்விநிலையில், எத்தகைய முறையில்மாணவர்களைச்சேர்ப்பது, சந்தர்ப்பம் தருவது என்று தெளிவாக அறிந்தவர்- அதுமட்டுமல்ல, உத்தியோகத் துறையிலே வகுப்புரிமை எவ்வளவு இன்றியமையாதது என்பதை, நன்கு உணர்ந்தவர்- அவர் அரசியல்உத்தியோகங்களில், வகுப்பு எண்ணிக்கைபடி, இடந்தருவது என்பதன் அவசியத்தை அறிந்திடும் நிலையிலே இருந்தவர்- சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு தலைவராக இருந்தவர்- அவருக்கு அதன் உண்மைத்தேவை தெரிந்த காரணத்தாலே, சமூக நீதி தேவை என்பதைஉணர்ந்து தலைமை தாங்க இசைந்துள்ளனர்- அத்தகைய அறிஞர் பெருந்தகை தலைமையிலே மாநாடு நடந்துள்ளது.

மேலும், ஆளும் அனுபவம்அதிகமுள்ள, அனுபவக்கனி, முன்னாள் அமைச்சர், நீதி ஏற்பட்ட காலத்திலிருந்து, இன்றுவரை ஏற்பட்ட நிலைமைகளை விளக்கியுள்ளார், இந்த மாநாட்டில்!

மற்றும் பெரியார் முதல் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

இது சென்னை ஆட்சியாளருக்கு அரிய பெரிய ஆதரவு தரும் சந்தர்ப்பம்! இதனை உணர்ந்து, சுப்ரீம் கோர்ட்டில், சமூகநீதிக்கு 'நீதி' கிடைக்காவிட்டால், இந்திய புதிய அரசியல் திட்டத்திலே திருத்தங்கொண்டுவந்தாவது சமூக நீதியை நிலைநாட்டும் துணிவு பிறக்கட்டும்.

★

## வடநாட்டுத் தர்பார்!

### டால்மியாபுரத்தில் அவதி

#### நமது தோழர்கள் ஒற்றுமை

அண்மையில் டால்மியாபுரம் சிமெண்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வெற்றி பெற்றதை மக்கள் அறிவர். தொழிலாளரின் சக்தியைக் கண்ணாரக் கண்டிருக்கும் வடநாட்டு நிர்வாகம் இன்னும் ஆத்திர அனலைத் தூண்டிக் கொண்டேயிருக்கிறதாம்!

நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு தவித்து ஒரு புறம் திரியும்போது- கடந்த வேலைநிறுத்தத்தில கலந்து கொண்டோரையெல்லாம் பழி வாங்கும் நோக்குடன் 'எக்ஸ்பிளனேஷன்', 'சஸ்பெண்ட்' முதலியவைகளை எடுத்து அடிக்கடி வீசி தொழிலாளத் தோழர்களை அவதிக்குள்ளாக்கி வருகின்றனராம்.

நமது தோழர்களை வேலையினின்றும் நீக்கி வடநாட்டிலிருந்து ஆசாமிகளைக் கொண்டுவந்து குவிக்க வேண்டுமென்ற டால்மியா நிர்வாகிகளின் ஆசை, அதிகமாகிக்கொண்டிருக்கிறதாம்.

2—12—50 அன்று இந்த ஆசையின் விளைவாக தனக்கன் எனும் ஒரு தோழரை பொய்க்குற்றம் சாட்டி வேலையிலிருந்து நீக்கினர். அதுகண்டு தொழிலாளர்கள் ஒற்றுமையோடு, குமாஸ்தாக்கள் உள்பட (வடநாட்டுத் தொழிலாளர் தவிர) பகல் ஒருமணி முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் தொடங்ினர். இதை அறிந்த திருச்சி ஜில்லா கலெக்டர் டால்மியாபுரம் வந்து, நிர்வாகிகளைக் கலந்துபேசி, நீக்கப்பட்ட தோழரை மீண்டும் வேலைக்கெடுத்துக்கொள்ளுமாறு செய்தார். பிறகு, வக்கம்போல வேலை நடந்துவருகிறது.

---

### நாகூர் அனிபா இசைவிருந்து

மதுரை:- 19-11-50 ஞாயிறு அன்று ஜோதி சினிமாவில் மதுரை இஸ்லாமிய சமூக சீர்திருத்த மன்ற நிதிக்காக நாகூர் E. M. அனீபாவின் இசைவிருந்து நடைபெற்றது.

---

### ★ திருமண அழைப்பிதழ் ★

—✕—

எங்களது வாழ்க்கை ஒப்பந்தம் 16—12—50 சனி காலை 8-மணிக்கு சி. என். அண்ணாதுரை, தலைமையில் தென் ஆற்காடுமாவட்டம் குறிஞ்சிப்பாடி இரா. சாம்பசிவம் இல்லத்தில் நிகழும். தாங்கள்வந்திருந்து மகிழ்விக்க வேண்டுகிறோம்.

அன்புள்ள,
C. சகுந்திரி,
D. V. சாமி.
(நியுபாரத்கபே, ரங்கோன்.)

குறிஞ்சிப்பாடி.

A.

---

## நடக்க இருப்பவை.

9—12—50ல் சைதாப்பேட்டையில் தி. மு. க. முதலாண்டு விழாவில் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., தோழியர் சத்தியவாணிமுத்தம்மையார் பேசுவர்.

10—12—50ல் சென்னை, ராயப்பேட்டை வள்ளுவர்பட்டி மன்ற சார்பில் வழக்கம்போல் புலவர் வே. த. அர்ச்சுனனால் திருக்குறள் வகுப்பு நடைபெறும்.

10—12—50ல் கோலார் தங்க வயலில் தோழர் என். வி. சபாபதி தலைமையில் தோழர்கள் மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) டி. கே. சின்னதுரை, தோழியர் விஜயலட்சுமி அம்மையார் பேசுவர்.

10—12—50ல் மதுராந்தகத்தில் தோழர் செய்யூர் சுதர்சனம் தலைமையில் பொதுச்செயலாளர் சி என். அண்ணாதுரை எம். ஏ., தில்லை — வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்), திண்டிவனம் தங்கவேலு, சதுரை. அழகரசு பேசுவர்.

10—12—50-ல் சதுப்பேரியில் தோழர் கோவிந்தசாமி தலைமையில் தோழர்கள் போளூர் கே. சுப்பிரமணியம், சதுப்பேரி கே-துயமணி பேசுவர். இரவு 9-30 மணிக்கு தோழர் வி-கே-பெருமாள் தலைமையில் 'நல்லமுடிவு' என்ற நாடகம் நடைபெறும்.

10—12—50ல் ஆர்க்காட்டில் மாலை 3-30 மணிக்கு செட்டித் தெரு 16-ம் எண் இல்லத்தில் தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில், தி. மு. க. பொதுக்குழுவினர் கூட்டம் நடைபெறும். மாலைப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஆர். நடராசன், த. ப. ஆதிகேசவன், செயராமன் பேசுவர்.

15—12—50ல் கண்டவராயன் பட்டியில் தோழர் காசிநாதன் தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., இரா. சத்தியேந்திரன் பி. ஏ., பி. எல்., குடந்தை எஸ்.கே. சாமி, என்.எஸ். இளங்கோ, கவிஞர் கண்ணதாசன் பேசுவர்.

15—12—50ல் தேவகோட்டையில் தோழர் திருவண்ணாமலை நகரசபைத் தலைவர் ப. உ. சண்முகம் தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. கவிஞர் கண்ணதாசன் பேசுவர்.

16—12—50 மாலை 5-மணிக்கு சோக்கநாதபுரத்தில் தோழர் க. இரா. சத்தியேந்திரன், பி. ஏ., பி. எல். தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. கவிஞர் கண்ணதாசன், என். எஸ். இளங்கோ எஸ். கே. சாமி பேசுவர்.

அன்று மாலை 7-30 மணிக்கு மானாமதுரையில் தோழர் க. இரா. சத்தியேந்திரன் பி. ஏ., பி. எல்., தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., மதுரை முத்து, எம். எஸ். இராமசாமி பேசுவர்.

17—12—50ல் மதுரை கீழச் சந்தை பேட்டையில் தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி, எஸ். வி. மாணிக்கம், கே. எஸ். ராஜமான் பேசுவர்.

17—12—50 காலையில் திருச்சியில் பெரியகடை வீதி தி. மு. க. ஆண்டுவிழா தேவர் ஹாலில் நடைபெறும். மாலையில் பொதுக்கூட்டம். இரண்டு நிகழ்ச்சிகளிலும் தோழர்கள் என். எஸ். இளங்கோ, எஸ். கே. சாமி, தஞ்சை எஸ். எஸ். மணி கலந்து கொள்வர்.

17—12—50ல் நெல்லிக்குப்பத்தில் தோழர்கள் என்-வி-நடராசன், சி-இளவழகன், கடலூர் ஓ-டி-சாமிநாதன் பேசுவர்.

# வேதனை உலகம்

[வேதனைக்குரல் — நாடெங்கும் எழும்பிவிட்டது! 'பிடி சோறு ஐயா!' என்று, நடமாடும் பிணங்களாய், பாட்டாளி மக்கள் பவனிவரத் துவங்கிவிட்டனர். பட்டினி! சாவு!! தற்கொலை!!! பரிதாபச் செய்திகள் நம்மைக் கலங்கவைக்கின்றன. மாட மாளிகை கேட்கவில்லை! பூணாங்களும் பொன்னுடைகளுமல்ல அவர்கள் விரும்புவது- கஷ்டமில்லாத வாழ்வும், உழைப்பில்லாத சுகமும் கேட்கவில்லை அவர்கள். 'நாங்கள் உழைக்கமுடியாது; உட்கார்ந்தே இருப்போம்; நீ உணவு கொடு!' என்று, பிடிவாதம் செய்யவில்லை. "பசி ஐயா! பட்டினி கிடக்கிறோம். பாடுபடக் கையுண்டு,காலுண்டு; வீட்டில் தறியுண்டு; உழைக்க மனைவியுண்டு, மக்களுண்டு; ஆனாலும் பட்டினி கிடக்கிறோம் ஐயா, பாரும், எங்கள் பரிதாபத்தை; தீரும் எமது சோகத்தை!" என்று, வேதனைக் குரல், எழுப்புகின்றனர், இந்நாட்டு நெசவாளித் தோழர்கள்!

நூல் கொடு போதும்—அதைக் கொண்டு நெய்து, காசாக்கி கால் வயிற்றையாவது நிரப்பிக் கொள்கிறோம் என்று, பரிதாபச் சிந்து பாடுகிறார்கள்!

ஆனால், அவர்களின், பரிதாபம் கண்டும், 'பாரில் எமது ஆட்சியே ஆட்சி!' என்று, வீணுகானம், எழுப்பிக்கொண்டிருக்கும் சர்க்கார் தூங்குகிறது! தூங்கிக் கொண்டேயிருக்கிறது!!

நாட்டில் வாழும் மக்கள் பட்டினி ஊர்வலம்' வருகிறார்கள்! நாடாள வந்தாரோ, 'படாடோப ஊர்வலம்' நடத்திக்கொண்டுள்ளார்கள் !!

பரிதாபமான காட்சி — அதைக் காட்டி, நமக்குவரும் 'வேதனைக்குரல்'களில், சிலவற்றைக் காணுங்கள்]

"ஐயா,

இப்பவும் நம் சென்னை மாகாணத்தில் நெசவாளர்கள் எவ்வளவோ அவதிப்படுகிறார்கள். நெசவாளர் குறைகளை சர்க்காருக்கு எடுத்துச் சொன்னாலும் அவர்கள் செவிடன் காதில் சங்கு ஊதின மாதிரி இருந்துவிடுகிறார்கள். நெசவாளர் குறைகளை சட்டசபையில் எடுத்து கூற ஆள் இல்லாததினாலேயே அவர்களும் கைத்தறி நெசவாளர் குறைகளைக் கவனிக்காமல் இருந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு எங்கே நெசவாளர்கள் குறையை கவனிக்க நேரமிருக்கும்? நம் சென்னை மந்திரிமார்கள் மாதா மாதம் ஊர்களைசுற்றவும் எதிர்க்கட்சிகளை எப்படி ஒடுக்குவது என்பதுபற்றி யோசனை செய்து கொண்டும் இருக்கும்பொழுது அவர்களுக்கெங்கே நெசவாளர் குறைகளை கவனிக்க நேரமிருக்கும்? நெசவாளர்கள் வேலையில்லாமல் பிச்சை எடுக்கவும், சில நெசவாளிகள் திருடவும், அத்திரு செய்கையும்செய்ய மனமில்லாத நெசவாளி பெண்டு பிள்ளைகளை விட்டு விட்டு, ஊரை விட்டு வெளியேறவும் சிலநெசவாளிகள் ஒன்றும் தெரியாமல் உயிரை மாய்த்துக்கொள்ளவுமாக இருக்கிறார்கள்!

கைத்தறி நெசவாளர்கள் இந்த சென்னை மாகாணத்தில் பிச்சை எடுக்கவும் திருடவும், உயிரைமாய்த்துக் கொள்ளவும்தான் பிறந்தார்களா? மனித சமுதாயத்திற்கு ஆடை நெய்துகொடுத்து, அவன் மானத்தைக் காப்பாற்றவேண்டுமென்று பிறந்தார்களா?

கோ. ராமகுரு,
கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத்தலைவர்,
ஸ்ரீவில்லிப்புத்தூர்.

## நாற்பதுக்கு ஒன்று?

மதுரை 26—11—50 ஞாயிறு மாலை 7 மணிக்கு பழைய குயவர் பாளையத்தில் மதுரைநகர் நெசவாளர் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர் எ. இராஜுநாயுடு அவர்கள் தலைமை வகித்தார். நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையை விளக்கி, சர்க்காரின் திறமையற்றபோக்கையும், லஞ்சஊழல்பற்றியும் கே. எஸ். சிவாஜி, கே. எஸ். ராசமான் முதலியோர் பேசினர்.

தோழர் எம். எம். அம்மமுத்து அவர்களால் கீழ்க்கண்ட தீர்மானம் ஒன்று பிரரேபிக்கப்பட்டு ஏ. எஸ். ராமசாமி அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாகநிறைவேறியது.

"மதுரையிலுள்ள தறிநெசவாளர்கள் சுமார் மூன்றுமாதகாலமாக எப்போது நூல் கிடைக்கும் என்று ஏங்கி நிற்கும்போது ஏமாற்றம் அளிக்கும் முறையில் (ஒருபாவுக்கு 40 பவுண்டுநூல் தேவையாக) இருக்கும்போது ஒரு பவுண்டு நூலைமட்டும் தறிகாரர்களுக்கு கிடைக்கும்படிசெய்துள்ள சர்க்காரின்போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது."

தென்காசி: ஹமீதியா மைதானத்தில் 17—11—50 அன்றிரவு 8-மணிக்கு தோழர் ந. மு. காதர் நாகூர் சாகிப் தலைமையில் கைத்தறி நெசவாளர்களின் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் மா. வேத. ஆறுமுகம் அவர்களும், ஜனாப் மைதீன் பக்ஷ், சுலைமான், கே. எம். ஜமால் முஹம்மது, பி. கே. சாமி மற்றும் பலர் தற்போது, நெசவாளர்களின் கஷ்டநிலைமை பற்றியும், நூல் கிடைக்காமல் பட்டினியால் வாடுகிறார்களென்றும், நமது ரேஷன் கடைகளில் வாரத்திற்கு இரண்டு அவுன்ஸ் ரேஷன்தான் போடுகிறார்களென்றும், ஆகவே நமது ஜில்லா கலெக்டர் அவர்கள் உடனே இதை கவனித்து நெசவாளர்களுக்கு போதிய நூலும் உணவும் கொடுத்து பட்டினியால் வாடும் நெசவாளர்களின் கஷ்டங்களைப் போக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

(1) தென்காசி ஏரியாவுக்கு சர்க்காரால் 'அலாட்மெண்டு' செய்திருக்கும் நூல் தறிகாரர்களுக்கு ஒரு வாரத்திற்கு கூட தொழிலுக்கு போதாமலிருப்பதால் மாதம் 1க்கு குறைந்த பட்சம் 160 பேல் நூல் அலாட்மெண்டு செய்யும்படி நமது சென்னை சர்க்காரையும் நமது ஜில்லா கலெகடர் அவர்களையும் இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

(2) தென்காசி ஏரியாவுக்கு மதுரை — தளவாய்புரத்திலிருந்து வரும் கெம்பு, நப்தல் கலர் நூல்கள் சாயபிடி கூலி ரூ. 12—8—0 யாக இருப்பதால் அந்த கூடுதல் சாயக் கூலியுள்ள நூல்களை உபயோகப் படுத்துவதில் தறிகாரர்களையும் வியாபாரிகளையும் ரொம்பவும் பாதிப்பதால் மேற்கொண்டும் கூடுதல் சாயக் கூலியுள்ள கெம்பு, நப்தல் கலர்களை கொள்முதல் செய்யவேண்டாமென்று இக் கூட்டம் நூல் லைசென்ஸ்தார்களை கேட்டுக்கொள்கிறது.

(3) நமது நகரிலுள்ள ரேஷன் கடைகளில் கொடுக்கப்படும் ரேஷன் அளவு ஒரு வாரத்திற்கு இரண்டு அவுன்ஸ்தான் தருகிறார்கள். அந்த ரேஷன் இரண்டு நாளைக்குக்கூட போதவில்லை. அதை மாற்றி சர்க்கார் திட்டபடி வாரத்திற்கு 12 அவுன்ஸ் ரேஷன் கொடுக்கும்படி நமது சென்னை சர்க்காரையும், நமது ஜில்லா கலெக்டர் அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கூட்டத்தில் கீழ்க்கண்டவர்களை சங்க நிர்வாகஸ்தர்களாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்: ந. மு. காதர் நாகூர் சாகிப், உபதலைவர் கு. நா. சண்முக முதலியார், காரியதரிசிகள்: ஏ. எம். செய்யது சுலைமான் சாகிப், மா. வேத. ஆறுமுகம், பொருளாளர்: கே. எம். ஜமால் முஹம்மது சாகிப், நிர்வாகஸ்தர்கள் 20 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பட்டினி ஊர்வலம்!

மதுரை 27—11—50 திங்கட் கிழமையன்று கடந்த மூன்றுமாதமாக நூல் கிடைக்காமல் வறுமையால் வாழ்விழந்து, பிச்சை எடுத்தும் குடும்பம் குடும்பமாக வேறு ஊர் சென்றும் வாழமுடியாத நிலைமையில் கதிகலங்கி, பரிதவித்து ஏங்கிநிற்கும் மதுரை நகரில் உள்ள 3000-க்கு மேற்பட்ட நெசவாளர் ஒன்றுதிரண்டு பழைய குயவர்பாளையத்தில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு கடைவீதி செல்லும் வழியாக கலெக்டர் ஆபீஸ் சென்றனர். நெசவாளர் சங்கக் காரியதரிசி தோழர், கே. எஸ். ராஜமான், பொருளாளர் ஏ. எஸ். ராமசாமி இருவரும் கலெக்டரைக் கண்டு பேசி மகஜர் ஒன்றையும் கொடுத்து நிலைமையையும் எடுத்து விளக்கினர்.

நூல் நெருக்கடி அகில இந்தியா முழுவதும் இருக்கிறது. பம்பாய் ஆலையில் வேலைநிறுத்தம் நடைபெற்றதால் நூல் அதிகம் வரவில்லை, ஜனவரிமாதம் வரையிலும் நூல் அதிகம் கிடைக்காது என்று மத்திய சர்க்கார் தெரிவித்துவிட்டதாகச் சொல்லி கையைவிரித்து விட்டார்.

ஏற்கனவே மூன்று மாதமாக நூல் அறவே கிடைக்காமல் பட்டினி கிடக்கிறோம். இன்னும் எத்தனை நாள் பட்டினி கிடப்பது? எப்படியாவது நூல் கிடைக்க வழிசெய்ய வேண்டும் என்று கேட்டும் பயனில்லாமல் போய்விட்டது. இந்த நிலையில் விசைத்தறிக்கும், 25-க்கு மேற்பட்ட தறிகள் உள்ள தொழிற்சாலைகளுக்கும் மில்லில் இருந்து நேரடியாக நூல்பெற வசதிசெய்திருப்பதாக சர்க்கார் அறிவித்திருப்பதால் தனிப்பட்ட ஏழை நெசவாளர்களுக்கு மேலும் மேலும் நெருக்கடி ஏற்படும் என்ற கவலையால் கண் கலங்கி நிற்கின்றனர்.

கே. எஸ். ராஜமான்

✻

## அனுதாபம்

நடிகத் தோழர் முத்துக்கூத்தன் அவர்களின் சகோதரர் தோழர் நாகரத்தினம் 15-11-50ல் இயற்கை எய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம்.

# "சாதிபேதம் ஒழியப் போராடிய மாவீரர்"

# பச்சையப்பன் கல்லூரியில் வ. உ. சி. நாள்

### "போர்வாள்" இளஞ்செழியன் முழக்கம்

"இன்றைய தினம் நம் மக்களிடத்து விழிப்புணர்ச்சியும், மறுமலர்ச்சியும் தோன்றியுள்ளது. ஆங்காங்கே புத்துணர்ச்சி நாடகங்கள் நடிக்கப்பட்டு வருகின்றன. சீர்திருத்த எண்ணங்கள் மலிந்து வருவதைப் பார்க்கின்றோம். நம் முன்னோர்களுக்குநற்றிணை குறுந்தொகை ஆகிய நம் இலக்கியங்களைப் பற்றி தெரியாதிருந்தது. இல்லை மறைக்கப் பட்டிருந்தது. அவர்களுக்குத் தெரிந்திருந்ததெல்லாம் இராமாயணமும் பாரதமும் தான். ஆனால் இப்பொழுது உண்மையான இலக்கியங்களைக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளோம். அதேபோன்று மறைக்கப் பட்ட அறிஞர்களையும் தலைவர்களையும் நம் மக்கள் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றோம். வ. உ. சியை நம் மக்கள் எண்ணிப்பார்க்கத் தொடங்கியிருக்கின்றனர்" என்று தோழர் மா. இளஞ்செழியன் அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் 21—11—50 மாலை நடந்த வ. உ. சி. நினைவு நாள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளர் தோழர் அன்புகணபதி அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர் இளஞ்செழியன் மேலும் பேசுகையில், "காந்தியார் சகாப்தத்திற்கு முன்னரே வ. உ. சியின் சகாப்தம் தோன்றியுள்ளது. திரு வி. க., வரதராஜுலு நாயுடு, பெரியார், திபாகராயர், பனகால், நாயர், நடேச முதலியார் ஆகியோருக்கு முன்னரே தமிழ்நாட்டில் அரசியல் விதையை ஊன்றியவர் வ. உ. சி. அவர்கள். தராசு, ஜெபமாலை, போர்வாள் ஆகிய மூன்று கருவிகளுள் ஒன்றைக்கொண்டு ஒரு நாட்டை ஆக்ரமிப்புக்கொள்ளலாம். இப்பொழுது நான்காவதாகப் "பிரசாரம்" என்ற கருவியைக் கம்யூனிஸ்டுகள் கையாளுகின்றனர். தராசு அதாவது பொருளாதார வணிகத் துறையில் நம் நாட்டை ஆக்ரமித்துக் கொண்ட ஆங்கிலேயரை அதே பொருளாதார முறையிலேயே முறியடிக்க வேண்டுமென்ற கருத்தில்தான் வ. உ. சி. கப்பலை ஓட்டிக் காட்டினார். இவற்றையெல்லாம்வி- அவர் செய்த முக்கிய காரியம் பல எதிர்ப்புக்களுக்கிடையே ஒரு ஆதித் திராவிடத் தோழன் ஒருவனை வைத்து ஆதரித்ததுதான். சொந்தக் கட்சியாக இருந்தபோதிலும் காந்தியாரின் போக்கைக் கண்டித்தவர் வ. உ. சி. ஹார்வி மில் தொழிலாளிகளின் உரிமைக்குப் போராடினார். சாதிக்கொடுமைகளைக்களையவேண்டி பல சுயமரியாதை மாநாடுகளில் தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றியிருக்கின்றார்.

வ. உ. சி. ஒரு சிறந்த எழுத்தாளர்; பேச்சாளர். சில ஆங்கில நூல்களுக்கு மொழி பெயர்ப்பு செய்திருக்கிறார். சிறையிலிருந்து கொண்டே சிறைக்கொடுமைகளைக் கவிதைகளாக ஆக்கித் தந்துள்ளார். திருக்குறளிலும் சேர்க்கை இருப்பதாகத் தக்க ஆதாரங்களோடு விளக்கிக் காட்டியுள்ளார்." என்று கூறிவிட்டு மாணவர்கள் அனைவரும் வ. உ. சியைப் போன்று நாட்டுக்குப் பணியாற்ற முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது.

## கழகச் செய்திகள்

### அக். 29

தனுஷ்கோடி தி. மு. க. செயற் குழுக் கூட்டத்தில் துவக்க விழா நடத்துவது சம்மந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருநெல்வேலி தி. மு. க. பொதுக் குழு உறுப்பினர் கூட்டம் தோழர் தனராசு தலைமையில் நடந்தது. தோழர் இராமச்சந்திரன் ராஜிநாமாவை ஒப்புக்கொண்டும், புதிதாக செயற்குழுவில் தோழர்கள் கே. ஏஸ். காஜாமுகைதீன், க. சுப்பிரமணியம் க. தனராசு ஆகியோரைச் சேர்த்தும், விளம்பர உறுப்பினராக தோழர் தனராசைத் தெரிந்தெடுத்தும், கழக அலுவலகத்தில் ஒரு படிப்பகம் திறக்கவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நவ. 3

பன்னுங்கோம்பை தி. மு. க. செயற் குழுவினர் இவ்வாண்டிற்கு புதுப்பிக்கப்பட்டனர். செயலாளர்கள்:— பொன்னுசாமி, பெரியசாமி பொருள் உறுப்பினர்:- நா. பெரியசாமி, விளம்பர உறுப்பினர்கள்:- அ. மூக்கன், இரா. பொன்னுசாமி, வரதராசு. அறிஞர் பெர்னாட்ஷா மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

### நவ. 4

கல்லக்குடி (டால்மியாபுரம்) யில் தோழர் எம். ஆர். செல்லப்பா தலைமையில் தி. மு. க. திறப்பு விழா நடந்தது. தோழர் சீனுவாசன் விழாச்சொற்பொழிவு நிகழ்த்தினர். தோழர் சவரிமுத்து நன்றி கூறினர்.

வடசேரியில் தி மு. க. செயற் குழு கூடி, நிர்வாகக் குழு அமைத்தது. செயலாளர்:- வை. சுப்பிரமணியம், துணைச்செயலாளர்:- அ. சுப்பையா, பொருள் உறுப்பினர்:- அ. சுப்பிரமணியம், வி. உறுப்பினர்:- பு. இராமச்சந்திரன்.

### நவ. 5

இடைப்பாடியில் தி. மு. க. செயற்குழு தோழர் மு இராசு, தலைமையில் கூடியது சேலம் மாநாட்டை விரைவில் நடத்த வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை தி. மு. க. சார்பில், தோழர் அந்தோனிமுத்து தலைமையில் தோழர்கள் எஸ். டி. செல்வநாயகம், தமிழ்மணி, மாயக்கிருட்டிணன், ஏ இளஞ்செழியன், சுந்தரராசன், மா. யோ. தேவராசன், எஸ். பால், ஈ க. நெடுஞ்செழியன் 'தீபாவளி திராவிடர் திருநாளல்ல' என்பது பற்றிப் பேசினர்.

குள்ளம்பட்டியில் தோழர் ப. இராமலிங்கம் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் தோழர் காசிலிங்கம் திராவிடப் பண் இசைத்தார். தோழர்கள் காசிலிங்கம், முத்துசாமி, பெருமாள், குமரன், சந்தசாமி, வரதராசன் பேசினர்.

சேத்துப்பட்டில் தி. மு. க பொது அங்கத்தினர்கள் கூட்டம் தோழர் ஆ. சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது. புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- ஆ. சுப்பிரமணியம், துணைச்செயலாளர்:- ஓ. செல்வராசன், பொருள் உறுப்பினர்:- ம. பூ. சிவஞானம், விளம்பர உறுப்பினர்:—டி. சிங்காரம். நிர்வாக அங்கத்தினர்கள்: —மு. கணேசன், வி. வாசுதேவன், ஏ. ரங்கநாதன், வே. ரங்கநாதன், ஆ. வி. சின்னப்பன். மாவட்டப் பிரதிநிதிகள்:- ஆ. சுப்பிரமணியம், டி. சிங்காரம்.

அக்கிப்பேட்டையில் (பெங்களூர் 2) தோழர் மு. அரங்கசாமி தலைமையில் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் இவ்வாண்டுக்குரிய புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- வே. இளஞ்சேரன், துணைச்செயலாளர்:- வெ. வ. பொன்னுரங்கம், பொருள் உறுப்பினர்:- வே. அ. தாமோதரம் விளம்பர உறுப்பினர்:- எம். வி. முனுசாமி, மற்றைய செயற் குழுவினர்:- மா. மன்னர், துரைசாமி, செல்வம், அரங்கசாமி செகநாதன்.

சேலம் அம்மாபேட்டை தி. மு. க. செயற்குழு கூட்டம் தோழர் கே. கொண்டையா தலைமையில் கூடியது. ஜார்ஜ் பெர்னார்ட்ஷா மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கப்பட்டது, தீபாவளி திராவிடர் திருநாளல்லவென்றும், சேலம் மாவட்ட தி. மு. க. மாநாட்டை டிசம்பர் மாதத்தில் நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வற்புறுத்தியும், சென்னையில் தி. க. தோழர்கள் நடத்தும் வடநாட்டு ஆதிக்கஎதிர்ப்பு மறியலை ஆதரித்தும், மாகாணமெங்கும், அடையாளமறியல் செய்த தோழர்களை, சிறைசென்ற தோழர்களைப் பாராட்டுகிறதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### நவ—6.

விருத்தாசலம் தி. மு. க. செயற் குழு தோழர் சி. முனுசாமி இல்லத்தில் தோழர் எஸ். சண்முகசுந்தரம் தலைமையில்கூடி இவ்வாண்டுக்குரிய செயற்குழுவைத் தேர்ந்தெடுத்தது. செயலாளர்:- பி. பழனிக்கண்ணு, துணைச்செயலாளர்:-எஸ். ஜி. சொக்கலிங்கம், பொருள் உறுப்பினர்:- இராசமாணிக்கம், விளம்பர உறுப்பினர்:- ஆர். கோவிந்தராசு, மற்றைய செயற்குழுவினர்:- கலியபெருமாள், சி. முனுசாமி, இளவரசன், கே. கிருஷ்ணமூர்த்தி, கண்ணன், இராமதாஸ், இராமசாமி, கண்ணன்.

அழகிச்சிப்பட்டி (மதுரை மாவட்டம்) தி. மு. க. பொதுக்குழு கூட்டம் தோழர் மு. மாணிக்கம் தலைமையில் நடந்தது. புதியநிர்வாகிகள் தேர்தல் நடந்தது. செயலாளர்:- அ. சுப்பையா, துணைச்செயலாளர் :— சே. கா. சி. பொருள் உறுப்பினர்:— சி. கருப்பன், விளம்பர உறுப்பினர்கள்.- அ. மந்தையன், மு. அம்பலம், மற்றைய செயற்குழுவினர்:- இராம. வீரணன், மு. மாணிக்கம், ரா. கிருட்டிணன், ராம. வே. முத்தையா வே. சேவகன், எஸ். முத்து, கரு. இராமன். அ. பெரியகருப்பன், மா. வீரணன்.

### நவ—8.

வதுவார்பட்டியில் தி. மு. க. துவக்கவிழா கூட்டம், தோழர் சிவசண்முகசுந்தரன் தலைமையில் நடந்தது. தோழர் சண்முகசுந்தரனுல் நாட்டுப்பண்பாடப்பட்டது. தோழர் எம். பி. நெடுங்கோ வரவேற்றார். சின்னையபுரம் மாணவச்சிறுவர்கள் சிலர் பேசிய பிறகு தோழர்கள், இளஞ்செழியன், எம். எஸ். இராமசாமி ஆகியோர் பேசினர். தோழர் நெடுங்கோ நன்றி கூறினர்.

இராசப்பையன் சாவடியில் தோழர் பி-எல்-வி- சாமி இல்லத்தில் தோழர் செங்கண்ணன், B. Sc தலைமையில் தோழர் தமிழ்முடில், கழகக்கொடியை ஏற்றுவித்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)


நாஞ்சில் மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழக

முதல் மாநாடு

இடம்:— கிருஷ்ணன் கோவில் தியாகராயர் பந்தல்

(ஆங்கிலப் பாடசாலை சமீபம்)

டிசம்பர் 29, 30, (வெள்ளி, சனி) நாட்களில்

தலைவர்: இரெ. இளம்வழுதி எம். ஏ; பி. எல்.,

துவக்குபவர்: என். எஸ். இளங்கோ

பொதுச்செயலாளர் அண்ணுதுரை, பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, M. A., L. T., இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ஈ. வி. கே. சம்பத், ஈ. வெ. அ. வள்ளிமுத்து, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் மற்றும் பல இயக்கத் தோழர்களும் பங்குகொள்வர்.

பொதுச்செயலாளர் அண்ணுதுரை, நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் நாடகங்கள்

"நீதிதேவன் மயக்கம்" வெள்ளி இரவு

"சந்திரமோகன்" சனி இரவு

பொதுச்செயலாளர், அ. இராமசாமி,
பொருளாளர், அ. குமாரவேலு

செயலாளர்கள், சு. வன்னியப்பெருமாள், பி. ஆறுமுகம்.
தொண்டர்படைத் தளபதிகள், எம். அந்தோனி, பி. இராமச்சந்திரன், எஸ். நடராஜன்.

வரவேற்பு கமிட்டி தலைவர், வி. எம். ஜான்,
விளம்பர உறுப்பினர்கள், கி. மனோகரன், வை. சுப்பிரமணியன், எஸ். சுப்பிரமணியன்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

மு:— திராவிட முன்னேற்றக் கழக கூட்டம் போடுவதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

ப-பி:— கூட்டம் போடக்கூடாதென்று தெரிவிக்கப்பட்டிருந்ததா? தண்டோரா போடப்பட்டதா?

மு:— தண்டோரா மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ப-பி:— கூட்டம் போடுவதால் என்ன ஏற்படும்போல் தெரிந்தது?

மு:— கலகம் ஏற்படும்போல் தெரிந்தது.

ப-பி:- அதன்பேரில் ரிப்போர்ட் அனுப்பினீரா?

மு:— அனுப்பினேன், மேஜிஸ்டிரேட்டால் 144 உத்திரவு போடப்பட்டிருந்தது. பிறகு 27-11-50 மாலை 5½ மணிக்கு மேஜிஸ்டிரேட், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், கான்ஸ்டேபிள்கள் எல்லோரும் நாரணமங்கலத்துக்கு கூட்டம் நடக்கும் இடத்துக்கு வந்திருந்தார்கள்- மந்தைவெளி அரசமரத்தடியில் எதிரிகள் எல்லோரையும் அழைத்து 144 உத்திரவைப் பற்றி சொன்னார்கள்- அது எங்களுக்குத் தெரியும்- தெரிந்தும் நாங்கள் பேசப் போகிறோம் என்றார்கள்- பேச ஆரம்பித்ததும் எல்லோரையும் கைது செய்துவிட்டார்கள்-

ப-பி:- பேசியிருந்தால் என்ன ஏற்பட்டிருக்கும்?

மு:- கலகம் ஏற்பட்டிருக்கும்.

அடுத்துத் தோழர்கள் குறுக்கு விசாரணை செய்தார்கள்-

செண்பகராசன்:- கலகம் ஏற்படும் என்கிறீர்களே அதற்கான முயற்சியை யார் செய்தார்கள்?

மு:- நீங்கள்தான்.

செ-ராஜன்:- எப்படித் தெரிந்தது?

மு:- அங்கிருந்த கூட்டத்தைப் பார்த்ததும் தெரிந்தது. கூட்டம் பெரிய அளவில் கூடியிருந்தது.

செ-ராஜன்:- ரிப்போர்ட் அனுப்பியதாகச் சொன்னீர்களே, நீங்களாக எழுதி அனுப்பினீர்களா? வேறு யாராவது எழுதக் கொடுத்து அதை வாங்கி அனுப்பினீர்களா?

மு:- என்- ஜி- தர்மலிங்கம் எழுதியதில் தான் கையெழுத்துப் போட்டு அனுப்பினேன்-

செ-ராஜன்:- ஏன்? உங்களுக்கு எழுதத் தெரியாதா?

மு:- தெரியும். இருந்தாலும் ராமலிங்கம் எழுதியதில கையெழுத்துப் போட்டேன்.

செ-ராஜன்:- அப்படியென்றால் ராமலிங்கத்தின் தூண்டுதல் பேரில் தானே நீர் செய்தீர்?

மு:- அவர் எழுதியதில் தான் கையெழுத்துப் போட்டேன்.

விஜயகோபாலன்:- கைது செய்யும்போது நீங்களும் அங்கு வந்திருந்தீர்களா?

மு:- நான் சப்இன்ஸ்பெக்டருக்கும் பின்னல் நின்றுகொண்டிருந்தேன்.

வடிவேலு:- நான் கூட்டத்தில் பேச முயன்றபோது கையில் என்ன வைத்திருந்தேன்?

மு:- கவனிக்கவில்லை.

அமராவதி:- தி. மு. க. பொதுக் கூட்டத்தால் பொதுஜன அமைதிக்குப் பங்கம் ஏற்படலாமென்று சொல்கிறீர்களே, அதனால், அங்கு என்ன பங்கம் ஏற்பட்டது?

மு:- அங்கு கூட்டத்தில் பங்கம் ஒன்றும் ஏற்படவில்லை-

ஆதிமூலம்:- இதற்கு முன்பு தி-மு- கழக கூட்டங்களுக்கு எங்காவது சென்று பார்த்திருக்கிறீர்களா?

மு:- நான் பார்த்ததில்லை- (கோர்ட்டில் சிரிப்பு)

ஆ:- பின் எப்படித் தெரியும்?

மு:- எனக்கு ஒன்றும் தெரியாது- (சிரிப்பு)

ஆ:- தெரியாத ஒரு விஷயத்தைப் பற்றி எப்படி ரிப்போர்ட் செய்தீர்கள்?

மு:- ராமலிங்கம் பற்றும் பலரும் சொன்னார்கள்.

அ:- அப்படியென்றால் பிறர் தூண்டுதலின் பேரில்தானே செய்தீர்கள்?

மு:- மௌனமாக இருந்தார்-

அ:- தி-மு-கழகத்தின் கொள்கை தெரியுமா?

மு:- தெரியாது.

அ:- தெரியாத ஒன்றுக்கு ஏன் ரிப்போர்ட் செய்தீர்?

மு:- ஊரார்கள் சொன்னார்கள்?

அ:- என்ன சொன்னார்கள்?

மு:- மதர் சாமி, இல்லையென்று பேசுவார்களென்று சொன்னார்கள்.

அ:- நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

மு:- எனக்கு ஒன்றும் தெரியாது—

அடுத்து சாட்சியாக பாடாலூர் சப்இன்ஸ்பெக்டர் தோழர். ராஜகோபால் விசாரிக்கப்பட்டார்.

27-11—50-நாலை P-W-1- பிறப்பித்த 144 பிரிவின்படி தடையுத்தரவை இரண்டாவது சாட்சியின் மூலம் கிராமத்திலும், எதிரிகளுக்கும் தெரியப்படுத்திவிட்டு, அன்று நாரணமங்கலத்தில் தடையுத்தரவு பந்தோபஸ்து செய்து கொண்டிருந்தேன்- அப்பொழுது மாலை 5½ மணிக்கு 1-முதல் 7-எதிரிகளும் தடையை மீறப்போவதாக அரசமரத்தடிக்கு மேஜை நாற்காலி ஒன்று எடுத்துக்கொண்டு வந்தார்கள். அப்போது, 1, 4, 5 எதிரிகள் உள்பட அனைவருக்கும் தடையுத்தரவை எடுத்துச்சொல்லிக் கேளாமல், 1, 2 எதிரிகள் வார்த்தைகள் பேசினார்கள். எதிரிகள் ஏழு பேரையும் கைது செய்தேன்-

ச- மாஜிஸ்டிரேட் உத்திரவு போடுவதற்கு முன் ஏதாவது எழுதி அனுப்பினீர்களா?

ச-இ:- நாரணமங்கலம் 'பெட்டிஷனை' அனுப்பினேன்- அந்த கிராமத்திற்கு 25—11—50-ல் பெட்டிஷன் தாரர்களைப் போய் விசாரித்து தடைபோடும்படி உத்திரவுசெய்ய பெரம்பலூர் S-S-M-க்கும் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கும் ரிப்போர்ட் அனுப்பினேன்-

ப-பி- கூட்டம் பேசியிருந்தால் என்ன நடந்திருக்கும்?

ச-இ:- கூட்டம் போட எதிர் பார்ட்டியிருந்தார்கள்- கலகம் ஏற்பட்டிருக்கும்-

அடுத்து தோழர்கள் குறுக்கு விசாரணை செய்தார்கள்-

ஞானமாபலை:- நீங்கள் எந்த ஊர் சப் இன்ஸ்பெக்டர்?

ச-இ:- பாடாலூர்

ப:- பாடாலூருக்கு முன் எங்கு இருந்தீர்கள்?

ச-இ:- திருச்சியில்

ம:- என்- ஜி:- ராமலிங்கத்தை தெரியுமா?

ச-இ:- தெரியும்

ம:- அப்பாவு உடையார் பேரில் நல்லுசாமிப்பனால் கொடுக்கப்பட்ட வழக்கு என்ன ஆயிற்று?

ச—இ:- பெரம்பலூர் சப்மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பி தள்ளப் பட்டது-

ம:- உங்கள் பெயர்?

ச-இ:- ராஜகோபால்

ம:- கவுண்டரா? செட்டியாரா? பட்டம்?

ச-இ:- சொல்லத்தயாரில்லை-

ம:- தகப்பனார் பெயர்?

ச-இ:- ராமசாமி-

ம:-கூட்டத்தில் கருப்புச்சட்டைப் போட்டிருந்த ஒருவரைப் பிடித்துத் தள்ளி, திட்டினீர்களே அது என்?

ச- இ:- கூட்டத்தைக் கலைக்க சுட்டுக்கூட கலைக்க அதிகாரம் இருக்கிறது.

விஜயகோபால்:- இன்னொரு (பார்டியும்) கூட்டம் போட்டு பேச இருந்ததாகச் சொன்னீர்களே? அந்த 'பார்ட்டி' காங்கிரஸ்காரர்களா? கம்யூனிஸ்டா? சோஷலிஸ்டுகளா? மற்ற எந்தக் கட்சியினர்? அவர்கள் கூட்டத்துக்கு விளம்பரம் செய்திருந்தார்களா?

ச-இ:- அது எனக்குத் தெரியாது.

விஜயகோபால்:- கூட்டத்தில் நாங்கள் பேசியதாகச் சொன்ன ஒன்றிரண்டு வார்த்தைகள் ஞாபகம் இருக்கிறதா? யார் பேசியது?

ச-இ:- ஞாபகம் இருக்கிறது. ஆனால் யார், பேசியதென்று சொல்ல முடியாது.

அமராவதி: எதிரிகளில் இதை முன்னின்று நடத்தியது யார் என்பது தெரியுமா?

ச- இ:- பெட்டிஷன்தார் ராமசாமி, சிதம்பரம், காதர் மற்றும் 45 பேர்.

ஆதிமூலம்:- எந்த காதர்?

ச- இ:- பா. காதர் சாயபு.

மருதமுத்து:- தடை மீறும் போது கலவரத்துக்கு ஏதாகிலும் அறிகுறி தோன்றிற்று?

ச- இ:- கூட்டம் நடந்திருந்தால் ஏற்பட்டிருக்கும்- அத்துடன்பிராசிகூஷன் தரப்பு சாட்சி விசாரணை முடிந்தது. பிறகு கோர்ட்டார் அவர்கள் எதிரிகளாகிய தோழர்களைப் பார்த்து உங்களுக்கு சாட்சி உண்டா என்று கேட்டார்கள். தோழர்கள் அனைவரும் நாங்களே தான் எல்லாம், தனியாக வேறு ஒருவரும் இல்லை என்றார்கள். தனித் தனியே ஒவ்வொருவரையும் ஏதாவது சொல்லவேண்டுமா என்று கேட்டு ஒன்றும் இல்லையென்றதும் வாக்குமூலத்தில் கையெழுத்து வாங்கப்பட்டது. வழக்கு மறுநாள் ஒத்திவைக்கப்பட்டது.

(நிருபர்)

# தீர்ப்பும்—செயலும்

"வேறு ஒருவருக்கும் தெரியாத, தனக்கு மட்டும் தெரிந்த மொழியில் வரவு செலவு கணக்குகளை எழுதும் முறையை வன்மையாகக் கண்டிக்கிறேன். தனக்கு மட்டும் தெரிந்த மொழியில் வியாபாரிகள் கணக்கு எழுதி வைத்துக்கொண்டு, அதைக் காட்டி, வழக்குத் தொடருவது என்பதை தடுக்காமல் விடக் கூடாது"

கடந்த நவ. 30ந் தேதியன்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஈ. ஈ. மாக் ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டார்.

வழக்கு சென்னையிலுள்ள ஒரு வடநாட்டுத் துணி வியாபாரியால் மதுரையிலுள்ள இன்னொரு வியாபாரியின் மீது தொடரப்பட்டதாகும்.

வடநாட்டு முதலாளி, தமது கணக்கு விபரங்களை இந்தி மொழியில் நடத்தி வருகிறார் என்பது கோர்ட்டாருக்குத் தெரிந்ததால், நீதிபதி, மேற்படி முறையைப்பற்றித் தமது தீர்ப்பில் கண்டித்துள்ளார்.

புரிய முடியாத மொழியில் வெளியிலிருந்து வரும வியாபாரிகள் கணக்கு நடத்துவது கூடாது—அனுமதிக்க முடியாதது என்பது சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு.

ஆனால்,

இதோ,

ஒரு கூற்று!

இந்தக் கூற்று, நவ. 28-ந் தேதி புது டெல்லியில் காங்கிரஸ் தலைவர் தாண்டன் வெளியிட்டதாகும்.

இந்த ஆண்டு அக்டோபரிலிருந்து, காங்கிரஸ் கமிட்டியின் கணக்குகள் எல்லாம் ஹிந்தியிலேயே எழுதப்பட்டு வருகின்றனவாம்.

காங்கிரஸ் கமிட்டி—என்று கூறிய பொழுது அவர் 'அகில இந்திய' என்பதை அழுத்தந் திருத்தமாகவே சொல்லியிருக்கிறார்.

அகில—இந்திய காங்கிரஸ் நிர்வாக வரவு செலவுகள் யாவும் புரியாத இந்தியில்தான் எழுதப்பட்டு வருகிறதாம். கூறுகிறார், காங்கிரஸ் தலைவர் தாண்டன்.

அது மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள பாங்கிகள் அனைத்தும் இனி இந்தியிலேயே தங்கள் கணக்குகளை எழுதவேண்டும்-என்று வற்புறுத்தியிருக்கிறார்.

இங்கே — புரியாத மொழியில் கணக்கிருக்கக் கூடாது என்கிறார் நீதிபதி!

வடநாட்டு—தாண்டன் புரியாத இந்தியில் கணக்கெழுதி வருகிறோம் என்கிறார்!

## சமூக உரிமை நீதி மாநாடு

### மதுரை-பெரிய குளத்தில் நடைபெறும்

வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறைக்காகப் போராடவேண்டும் என்ற நோக்கோடு கட்சி சார்பற்ற மாநாடு ஒன்றை மதுரை மாவட்டம் பெரிய குளத்தில் வரும் டிசம்பர் 27ந் தேதியன்று கூட்டுவதற்கான ஏற்பாடுகள் பெருமிதமாகச் செய்யப்பட்டு வருவதாக மேற்படி மாநாட்டின் செயலாளரான பொற்செல்வி இளமுருகு அறிவிக்கிறார்.

காஞ்சியில், செங்கற்பட்டு மாவட்ட

தி. மு. க. முதல் மாநாடு டிச 23, 24 தேதிகளில்

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram